கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(07.03.2021 - 07 பங்குனி 2021 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 11, கதிர் - 248, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 08 / NEWS / 2021

# ஞான ஒளி
ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

**திருத்தந்தையின் இம்மாத கருத்து**

ஏனைய மதத்தைச் சார்ந்த எமது சகோதரர்களுடன் அன்புடனும், கூட்டுறவுடனும் வாழ நம் இறைவன் அருள் புரிவாராக.

# பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பங்குனி 2ஆம் திகதி வெளியிட்ட ஊடக அறிவித்தல்.



பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை 2021ஆம் ஆண்டு பங்குனி 07ஆம் திகதியை கறுப்பு ஞாயிறு (Black Sunday)யாக அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கு வருகைத்தந்திருக்கும் ஊடகவிய-லாளர்களை வரவேற்பதுடன் நேற்று அதாவது 2021 பங்குனி 01ஆம் திகதி ஜனாதிபதியினால் பாஸ்கு ஞாயிறு குண்டுத்தாக்குதல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை சட்ட இயக்குனர் ஜெனரல். நீதிபதி ஹரிகுப்த றோகணதீர அவர்களினால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இன்றைய ஊடக சந்திப்பில் கொச்சிக்கடை திருத்தலம், கட்டுவாப்பிட்டி தேவாலயம் இரண்டிலும் பாதிக்கப்பட்டவர்களும் கலந்துக்கொள்கிறார்கள். எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறுதி அறிக்கையை, நானும் என் துணை ஆயர்களும், அருட்பணியாளர்களும், விசேட நிபுணர்களும் கொண்ட குழு ஆழமாக ஆராய்ந்து எமது முடிவுகளை விரைவாக முன்வைப்போம்.

இவ்வறிக்கையை முன்கொண்ட பலரின் கருத்துக்கள் பலவாராக இருந்தாலும் அதை நுட்பமாக ஆராயும்வரை நாம் எவ்விதமான கருத்துக்களையும் கூற மாட்டோம்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தமது கடமைகளின் மத்தியிலும் நாட்டின் பாதுகாப்புக்குப் பொறுப்பான குறிப்பிட்ட நிறுவனங்களான; குற்றவியல் புலனாய்வு திணைக்களம் (CID), பயங்கரவாத விசாரணைப் பிரிவு (TID), அரச புலனாய்வு சேவை (SIS) போன்றவை ஆழமாக விசாரணை செய்தனரா என்ற பெரும் சந்தேகம் எமக்கிருக்கிறது....

15

# விசுவாசிகள் அனைவரும் கறுப்பு உடையணிந்து வழிப்பாடுகளில் கலந்துக்கொள்ளுங்கள்.

\- பேராயர்

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்**

இது கைதேர்ந்த ஒருவரால் திட்டமிடப்பட்ட மனித படுகொலை

இதில் நேரடியாகத் தொடர்புடையோருக்கும், கடமைகளைத் தவறவிட்டவர்களுக்கும், சட்டம் நீதி வழங்கட்டும்

**உண்மையை வெளிப்படுத்துங்கள்**

\- இரு ஆண்டுகளாக மௌனம் காக்கும் மக்கள் -

**கறுப்பு ஞாயிறு (Black Sunday)**

பாஸ்கு ஞாயிறன்று தாக்கப்பட்ட இக்கொடூர நிகழ்வு வருகிற சித்திரை மாதம் 21ஆம் திகதியுடன் இரண்டு வருடமாகிறது.

இரண்டு வருடங்களை நெருங்கும் அதாவது 23 மாதங்களுக்கு மேலாக நாட்டின் சட்டங்களுக்கு மதிப்பளித்து, அதிகாரிகள் எமக்களித்த வாக்குறுதிகளை நம்பி, நீதி கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருந்தோம்.

15




**ஆண்டவரே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன. (தி.பா 19)**

# பங்கு ரீதியாக "சிறிய கிறிஸ்தவ குழும ஆண்டினை" ஊக்குவித்துப் புத்துயிர் கொடுப்போம்.

கொழும்பு உயர்மறைமாவட்டமானது சிறிய கிறிஸ்த குழுமங்களுக்குப் புத்துயிர் கொடுத்து ஊக்குவிக்கும் முகமாக சிறப்புத் செயற்திட்டம் ஒன்றை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை, பொரளை, சகல புனிதர்கள் ஆலயத்தில் அமுலாக்கம் செய்யத் தீர்மானித்துள்ளது என்று பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை பேராயர் இல்லத்தில் இடம்பெற்ற குருக்களுக்கான விசேட ஒன்றுகூடலில் (Presbyteral Meeting) தெரிவித்தார்.

மேலும் இந்த செயற்திட்டத்தினை பங்கு ரீதியாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதின் மூலமாக பங்குகளில் செயற்படும் சிறிய கிறிஸ்தவ குழுமங்களை ஊக்குவித்து புத்துயிர் கொடுக்கலாம் என்றும் வலியுறுத்தினார்.

அத்தோடு இச்செயற்திட்டத்தினை பங்கு ரீதியாகச் செயற்படுத்துவதற்கு உயர்மறைமாவட்ட விசுவாச ஊக்குவிப்புக் குழு ஒவ்வொரு வாரமும் தனிப்பட்ட பங்குகளுக்கு விஜயம் செய்து பயிற்சி அளிப்பதோடு, மறைக்கோட்ட ரீதியாக 10ம் நாள் பயிற்சி நெறியினை மேற்கொண்டு ஊக்குவிக்கவுள்ளனர். இந்தச் செயற்பாடும், பயிற்சியும் இந்த ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

இவற்றில் முக்கியமானது சிறிய கிறிஸ்தவ குழும ஊக்குவிப்பாளர்கள், தலைவர்களைப் பயிற்றுவித்து அவர்கள் ஏனைய அங்கத்தவர்களை ஊக்குவித்து செயற்படுவதோடு அதன் செயற்பாட்டு அறிக்கையினை தொகுத்துக் கொள்ளுவது சிறப்பானது.

# தேசிய வழிபாட்டுத்தலங்களை அடிப்படையாகக் கொண்ட விவரணத் திரைப்படங்களைத் தயாரித்தல்.

தேசிய கத்தோலிக்க வெகுசன தொடர்பாடல் மத்திய நிலையம் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் ஊடாக கிறிஸ்தவ மத மற்றும் கலாச்சாரங்களைப் பேணும் நோக்குடன் கீழே காட்டப்பட்டுள்ள வழிபாட்டுத்தலங்களை அடிப்படையாகக் கொண்டு விவரணத் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- தேவத்தை இலங்கை அன்னை தேசிய பசிலிக்கா வழிபாட்டுத்தலம்
- தலவில புனித அன்னம்மாள் தேசிய வழிபாட்டுத்தலம்
- வரலாற்றுச் சிறப்புமிக்க மடுமாதா தேசிய வழிபாட்டுத்தலம்
- ஹாக்கோட்டை புனித அந்தோனியார் தேசிய வழிபாட்டுத்தலம்

இந்த விவரணத் திரைப்படத்திற்காக மேலே குறிப்பிடப்பட்ட வழிபாட்டுத்தலங்களது வரலாறு, தேவாலயங்களுடன் தொடர்புடைய விசேட சம்பவங்கள், புகைப்படங்கள், விசேட பாரம்பரிய வழங்கள், கட்டிடக்-கலை, பூகோள ரீதியான அமைவிடம் போன்ற துறை-களின் கீழ் உங்களிடம் தகவல்கள் காணப்பட்டால் **2021 பங்குனி மாதம் 31ம் திகதிக்கு** முன்னர் உரிய ஆவணங்களது வன்பிரதிகளை அல்லது மென்பிரதிகளை **பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், 16/1, ஷேடி குரோவ் அவனியு, கொட்டா வீதி, கொழும்பு 08. / பணிப்பாளர், கத்தோலிக்க வெகுசன ஊடாக மத்திய நிலையம், 19, பெல்கம் பிளேஸ், கொழும்பு 08** என்ற முகவரிகளுக்கு பதிவுத் தபாலில் அல்லது d-christianreligiousaffairs@yahoo.com / frenandolaomi@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பவும் அல்லது ஒப்படைப்பதன் ஊடாக இந்தப் பணியில் நீங்களும் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழே காட்டப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு **0112665584** அழைக்கவும்.


# ஊடக அறிவித்தல்

மதிப்பிற்குரிய சூழல் அமைச்சர் மகிந்த சமரவிர, வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் விமல் வீர திசாநாயக்க, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரத்தின் தலைவர் சிறிபால சமரசிங்க ஆகியோரின் பங்களிப்புடன் 2021 தை 21ம் திகதி ஆயர் இல்லத்தில் நிகழ்ந்த சந்திப்பில், முத்துராஜ சதுப்பு பூமியில் எந்தவொரு திட்டமோ, அழிவின் செயற்பாடுகளோ நடைபெறாது என எமக்கு உறுதியளித்தார். முத்துராஜ சதுத்து நிலத்தில் இதுவரை ஏற்பட்ட அழிவுகளை ஆராய குழுவொன்றை நியமிப்பதாக உறுதியளித்ததுடன் என் சார்பாக இரண்டு பிரதிநிதிகளை நியமிக்குமாறு கேட்டதற்கிணங்க இருவரின் பெயர்களை அனுப்பியுள்ளேன்.

குறிப்பிட்ட அமைச்சர்கள், சூழல் பொறுப்பதிகாரியினால் அன்று எமக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளதுடன் முத்துராஜ சதுப்பு மூலமும் அதன் சுற்றுப்புற கிராமங்களை நகர அபிவிருத்தி ஆணையம் கையகப்படுத்தும் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்று எனக்குத் தந்த வாக்குறுதியை வேண்டுமென்றே நிராகரித்தற்காக எனது கடும் அதிருப்தியை வெளிப்படுத்துவதுடன் முத்துராஜ சதுப்பு நிலமும் அதன் சுற்றுப்புற கிராமங்களை நகரமாக்கும் அபிவிருத்தி அதிகாரிகளுக்கு கையகப்படுத்தும் ஆலோசனைக்கு எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றேன். சில நாட்களுக்கு முன்பு காட்சிப்படுத்திய பெயர் பலகையை வேண்டுமென்றே அப்புறப்படுத்தி அப்பகுதி தமக்குரியதாக குறிப்பிடும் பெயர்பலகை போட்டிருக்கும் முத்துராஜ சதுப்பு பூமியை தேசிய வனபூங்கா என பெயரிடப்பட்டதை வனவிலங்கு பாதுகாப்பு பிரதேசமாக பெயரிடுமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
**கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர்**
**2020, ஆடி 14**

# ஆண்டவரோடு 24 மணி நேரங்கள், பங்குனி 12–13




உலகில், கொரோனா பெருந்தொற்றின் அச்சுறுத்தல் தொடர்ந்து நிலவிவந்தாலும், இவ்வாண்டும், "ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" என்ற பக்திமுயற்சியைக் கடைப்பிடிக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கத்தோலிக்கர் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

திருத்தந்தையின் இந்த அழைப்பு பற்றி தகவல் வெளியிட்ட, புதியவழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவை, தவக்காலத்தின் நான்காம் ஞாயிறன்று கடைபிடிக்கப்படும் "மகிழும் ஞாயிறு"க்கு முந்தைய வெள்ளி, சனி, ஆகிய இரு நாள்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த பக்தி-முயற்சி, இவ்வாண்டு, பங்குனி மாதம், 12 மற்றும், 13ம் திகதிகளில் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

"அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கிறார்" (தி.பா.103:3) என்ற திருப்பாடல் சொற்கள், இவ்வாண்டில் கடைப்பிடிக்கப்படும், "ஆண்டவரோடு 24 மணி நேர இறைவேண்டல்" பக்திமுயற்சியின் தலைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து கிறிஸ்தவ சமுதாயங்களும், இந்த பக்திமுயற்சியை கடைப்பிடிப்பதற்கு உதவியாக, புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, சிறிய வழிகாட்டி கையேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

வருகிற பங்குனி மாதம் 12, 13 ஆகிய திகதிகளில், கத்தோலிக்கர் அனைவரும், ஆண்டவரோடு 24 மணி நேரம் இறைவேண்டலில் செலவழிப்பதற்கு நேரம் ஒதுக்கி, ஒப்புரவு அருள்சாதனத்தைப் பெற்று, இறைவார்த்தையை அடிப்படையாகக் கொண்டு இறைவேண்டல் செய்யவும், தியானம் மேற்கொள்ளவும் அழைக்கப்படுகின்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

2014ம் ஆண்டிலிருந்து, புதியவழி நற்செய்தி அறிவிப்பு திருப்பீட அவை, "ஆண்டவரோடு 24 மணி நேர இறை-வேண்டல்" என்ற பக்தி முயற்சியை, ஏற்பாடு செய்து நடத்திவருகிறது. 2015ம் ஆண்டு திருத்-தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட தவக்காலச் செய்தியில், இந்த பக்திமுயற்சியில் கத்தோலிக்கர் அனைவரும் பங்குபெறுமாறு கேட்டுக்கொண்டார்.

# பாஸ்கா குண்டு தாக்குதலின் உண்மை மறைக்கப்படாமல் முழு உலகிற்கும் இந்த உண்மையை வெளிப்படுத்துமாறு வேண்டி மன்றாடும் விசேட செபம்.

உண்மையின் நீதியின் ஊற்றாகிய இறைவா! / மனித வாழ்வின் எல்லாத் துன்ப வேதனைகள் மத்தியிலும் / நீர் எம்மை ஒருபோதும் கைவிடமாட்டீர் என / நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். / நீர் சிலுவையில் / உம்மையே பலியாகத் தந்து / எம்மீது பொழியும் உமது பரிவிரக்கதிற்கும் / அன்பிற்கும் / எல்லையே இல்லை என்பதை / நாங்கள் அறிந்திருக்கின்றோம். 2019ம் ஆண்டு / மிலேச்சத்தனமான பயங்கரவாத தாக்குதலின் / கசப்பான பலனை / அனுபவித்துக் கொண்டிருக்கும் எம்மீது / உமது கருணை கண்களின் பார்வையை திருப்பியருளும் / இந்த கண்ணீர்க் கணவாயில் / பரிதவிக்கும் எமது கனிவான வேண்டுதலுக்கு செவிசாய்த்து / இந்த பயங்கரமான மனித படுகொலையின் / முழு உண்மையை வெளிப்படுத்துமாறு / தாழ்மையுடன் மன்றாடுகின்றோம்.

அன்று ஆபேலின் இரத்தம் / உமது நீதியை வேண்டி கூக்குரலிட்டதுபோல் / இந்த குண்டுத் தாக்குதலில் / மரித்த எம் சகோதரர்களின் இரத்தமும் / உமது நீதியை வேண்டி கூக்குரலிடுகின்றது.

ஆகவே, இடம்பெற்ற பேரழிவிற்கான / நீதியை நிலைநாட்ட / எம் நாட்டின் தலைவர்கள் / பக்கச்சார்பின்றி நேர்மையுடன் செயலாற்றிட / வழிநடத்தியருளும். / இவ்வாறான பேரழிவு / மீண்டும் எமது தாய் நாட்டில் / இடம்பெறாதிருக்க இங்கு வாழ்கின்ற அனைத்து மக்களையும் / பாதுகாத்தருளும்.

அனைத்துவிதமான துன்ப வேதனைகளின் போதும் / எம் மனங்களை தேற்றி / குணப்படுத்தியருளும் / எதிர்பார்ப்பு எனும் புண்ணியத்தால் / எம்மை திடப்படுத்தி / கல்வாரி மலையின் சிலுவையடியில் / தன் மகனுக்கு / வலிமையாகிய இறை அன்னையே, / இந்த வேதனை நிறைந்த வேளையில் / எம்மோடிருந்து எங்களுக்காக இறைவன் திருமுன் / பரிந்துப் பேசியருளும்.

இம்மன்றாட்டுக்களை / எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக / உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

**கிறிஸ்து கற்பித்த செபம்... மங்கள வார்த்தை செபம்... திரித்துவப் புகழ்...**

**இலங்கை இராக்கினியே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தூய சூசையப்பரே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தூய அந்தோனியாரே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தூய யோசேவ் வாஸ் முனிவரே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**தூய செபஸ்தியாரே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**

**இறைவனின் சகல புனிதர்களே, மறைசாட்சிகளே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.**

# ஞான ஒளி

GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
07 பங்குனி, 2021 ஞாயிற்றுக்கிழமை.


## “இறைவன் எம்மை மீட்க இரு கரங்களை விரித்து காத்துக் கொண்டிருக்கின்றார்.”

பாவத்தைக் கைவிட்டால்தான் வாழ்க்கையின் பொருளைப் புரிந்துகொள்ள இயலும். இதற்கான தகுந்த காலந்தான் தவக்காலம். உலகம் முழுவதும் மீட்படைய வேண்டும் என்ற எண்ணத்தால்தான் இறைமகன் மனிதனாக இம்மண்ணுலகிற்கு வந்ததும் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டதும் உயிர்த்தெழுந்ததும் என்று திருத்தூதர் யோவான் கூறுகின்றார். யோவான் 1:29 இவ்வாறு கூறுகிறது இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர். நல்லாயன் இயேசு 99 ஆடுகளை விட்டுவிட்டு காணாமல் போன அந்த ஒரு ஆட்டைத் தேடிச் சென்றார். தேடிச் செல்வது என்பது ஒருவர் எம் மீது கொள்ளும் அளவற்ற அன்பும் கனிவும் பற்றுமாகும். இக்காலத்தில்தான் நாமும் இறைவனோடு ஒன்றிக்க அழைக்கப்படுகின்றோம்.

தவக்காலம் இறை இரக்கத்தின் காலம். செபத்தோடும் தவத்தோடும் அன்பு செயல்பாடுகளோடும் இப்புனித காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம். செபம், நோன்பு, அன்புச் செயல்கள் இவை மூன்றும் யூத கலாச்சாரத்தின் ஆன்மீக படிகளின் மூன்று முக்கியத் தூண்களாக இருந்தவை. எனவே இதே படிமுறையை நாமும் பின்பற்றி இத்தவக்காலத்தில் வாழ்ந்திடுவோம். நாம் பாவ வாழ்வைவிட்டு மனமாற்றமடைய மீட்படைய புது வாழ்வுப் பெற இறைவனால் நமக்கு தரப்பட்டிருக்கும் மிகச்சிறப்பான காலந்தான் தவக்காலம். மனமாற்றம் என்பது உள்ளத்தை இறைவனுக்கு முழுமையாக கொடுப்பதாகும். மனமாற்றம் என்பது உள்ளார்ந்த மனமாற்றத்தை, இதய மாற்றத்தை குறிக்கிறது. நமது வாழ்வு முழுவதையுமே கிறிஸ்துவின் மனநிலையின் அடிப்படையில் அமைத்தல், முழு உள்ளத்துடன் இறைவனிடம் திரும்புதல், பாவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல், தீமைகளிலிருந்து விலகுதல், நாம் செய்த தீச்செயல்களை வெறுத்துத் தள்ளுதல், புதிய வாழ்வு வாழ உறுதியான நிலைப்பாடு எடுத்தல். மனந்திரும்புவோரின் செயல்களில் முதலிடம் பெறுவது மனத்துயராகும். அது செய்த பாவத்தின் மீது உளமார்ந்த வேதனையும் வெறுப்பும், அத்துடன் இனிமேல் பாவம் செய்வதில்லை என்ற மன உறுதியுமாகும். இறையரசை அணுக ஒரே வழி முழு மனிதனின் ஆழமான மனமாற்றம். மனமாற்றம் உண்மையாக இருப்பது இந்த இதயப்பூர்வமான துயரைப் பொறுத்துள்ளது. மனமாற்றம் ஒவ்வொரு மனிதனையும் உள்ளிருந்து பாதிக்க வேண்டும். மனத்துயருக்கு இன்றியமையாத தேவை பாவ உணர்வு. தான் பாவி என்பதை ஏற்றுக்கொள்ளும் மனநிலை, மனப்பக்குவம் ஆகும்.

இன்று பலர் சமூக அநீதிகளை அடையாளம் காட்டுகின்றனர். அவைகளைக் களைய முனைப்பாகச் செயல்படுகின்றனர். ஆனால் அவர்களில் பலர் தங்களின் அநீதிகளை கண்டுகொள்வதில்லை. இவர்கள் தாங்கள் யாரென்பதை இனங்காண இடமளிக்க விரும்பாதவர்கள். எந்நேரமும் அடுத்தவர் பற்றிய தீய எண்ணமும் தீச்செயலுமே இவர்கள் உள்ளத்தில் பற்றியெரியும். இத்தகைய எண்ணங்களும் செயல்களும் எம்மை விட்டு நீங்கவும் இறைவனுடன் நல்லுறவை ஏற்படுத்தவுமே இந்த தவக்காலம் தரப்பட்டிருக்கின்றது. எனவே நாம் மனம் மாறவும், இறையுதவியை நாடவும் இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம். நிச்சயம் இறைவன் எம்மை மீட்க இரு கரங்களை விரித்து காத்துக் கொண்ருக்கின்றார். தவக்காலத்தில் எமக்கு ஏற்படுகின்ற சோதனைகள் வேதனைகள் போராட்டங்கள் அனைத்தையுமே தாங்கிக் கொள்ளும் பக்குவமான மனநிலையை எமது குடும்பங்களில் வாழ்ந்திடுவோம். ஒருவரொருவர் மீது பழி பாவம் சுமத்தாமல் செய்த தவறுகளை நாமே திருத்தி மன்னிப்புப் பெற்று உறவை புதுப்பிப்போம். நாம் எமது குடும்பத்தினருக்காக எத்தனை எத்தனையோ நன்மைகளை செய்திருந்திருந்தும் சிலவேளைகளில் எம்மை தூற்றிவிடுவார்கள். அச்சமயங்களில் நாம் இதையெல்லாம் அவர்களுக்கு செய்தோமே என்று சுட்டிக்காட்டி எமக்குரிய பலனை இழந்துவிடாமலும் அவர்களின் வெறுப்பையும் கோபத்தையும் பன்மடங்காக்கி விடாமலும் எமக்காக துன்புற்ற இயேசுவை ஒருகணம் நினைத்துப்பார்த்து நம்மை நாமே தேற்றிக்கொள்வோம். இதுதான் இத்தவக்காலத்தில் நாம் செய்யும் பெரிய தியாகமாகும். குடும்ப பகையுடன் நாம் திருப்பலி செல்வதும் காணிக்கை தருவதும் திருயாத்திரை செல்வதும் உபவாசமிருப்பதும் எந்த விதத்திலும் பயன் தரப்போவதில்லை. நாம் கடவுளோடு சேர்ந்து நடக்க அவருக்கு இடமளிக்க வேண்டும். அப்போதுதான் தவக்காலம் எமக்கு புனிதக்காலமாக அமையும்.

கடந்த இரண்டு வருடமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கிடைக்காமைக்காக எதிர்வரும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் பேராயரின் வேண்டுகோளுக்கிணங்க எமது கிறிஸ்தவ சமூகம் கறுப்பு ஆடை அணிந்து எமது அதிதிருப்தியை காட்ட, இந்நிகழ்வில் பங்கெடுக்க முன்வருவோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**

# திரும்பி வாருங்கள்



## திருநீற்றுப் புதன்கிழமையன்றுதிருத்தந்தையின் மறையுரை

மாசி 17, திருநீற்றுப் புதன்கிழமையன்று, உரோம் நேரம் காலை 9.30 மணிக்கு, கோவிட்-19 கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு இயைந்த வகையில், குறைந்த அளவு விசுவாசிகளின் பங்கேற்புடன், வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தையின் புதன் மறைக்கல்வியுரை வழக்கமாக இடம்பெறும் அதேநேரத்தில் இடம்பெற்ற இந்த திருப்பலியில், திருத்தந்தை வழங்கிய மறையுரையில், இறைவனிடம் நாம் திரும்பிச் செல்ல விடப்படும் அழைப்பு குறித்து விளக்கினார்.

“உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்” (யோவேல் 2:12) என, இறைவனின் இதயத்திலிருந்து எழும் வார்த்தைகளை யோவேல் இறைவாக்கினர் எடுத்துரைப்பதிலிருந்து இந்த தவக்காலப் பயணத்தை நாம் தொடங்குகிறோம். எத்தனையோமுறை இறைவனின் இந்த அழைப்புக்கு நாம் சாக்குபோக்குச் சொல்லி விலகிப் போயிருக்கலாம், ஆனால், இப்போது இறைவனிடம் திரும்பி வரவேண்டிய நேரம் வந்துள்ளது. நம் முழுவாழ்வையும் ஈடுபடுத்தி, முன்னோக்கிச் செல்லவேண்டிய நம் வீடு குறித்தும், இறைவனுடன் நம் உறவு குறித்தும் சிந்திக்க வேண்டிய காலம், இத்தவக்காலம். நாம் ஆற்றும் சிறு சிறு தியாகங்களை மட்டும் இத்தவக்காலம் எதிர்பார்க்கவில்லை, மாறாக, நம் இதயம் எதை நோக்கிச் செல்கிறது என்பதை தெளிவாகக் கண்டுகொள்வதையும் எதிர்பார்க்கிறது. நம் வாழ்வெனும் கப்பல் நம்மை நோக்கியா, அல்லது, இறைவனை நோக்கியா நம்மை இட்டுச் செல்கிறது என்பதை சிந்திப்போம். இறைவனுக்கு இயைந்த வகையில் நாம் வாழ்கிறோமா, அல்லது, நம்மை பிறர் புகழ வேண்டும் என வாழ்கிறோமா? உறுதியற்ற இதயத்தோடு, காலை முன்வைப்பது பின்னர், பின்வாங்குவதுமாக இருக்கிறோமா? இறைவனைக் கொஞ்சமும், உலகை கொஞ்சமுமாக அங்குமில்லாமல், இங்குமில்லாமல் இருக்கிறோமா? நம் வெளிவேட நிலைகள் குறித்து மகிழ்ச்சியடைகிறோமா, அல்லது, நம் பொய்மை நிலைகளைக் களைய முயல்கிறோமா?

தவக்காலப்பயணம் என்பது அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை நோக்கி கடந்து செல்லும் பயணம். தங்கள் பூமிக்கு திரும்ப இறைவனின் மக்கள் எடுத்துக்கொண்ட 40 ஆண்டுகளைக் குறிப்பதாக, இந்த நாற்பது நாள் பயணம் உள்ளது. அன்றைய மக்கள், எகிப்திலிருந்து புறப்பட்ட பாதையின்போது, அந்நாட்டிற்கேதிரும்பிச் செல்வதற்கும், சிலை வழிபாட்டுக்கும் உரிய சோதனைகளைச் சந்தித்தனர். அதேபோல், இறைவனை நோக்கிச் செல்லும் நம் பாதையில், நாம் பற்றிக்கொண்டிருக்கும் பாவச்செயல்களால் தடைகளைச் சந்திக்கிறோம். நம் பயணம் தடையின்றி தொடர வேண்டுமெனில், சரியான பாதை குறித்த பொய்த்தோற்றங்கள் களையப்படவேண்டும். இதற்கு இறைவார்த்தை நமக்கு உதவுகின்றது. காணாமற்போன மகன் தன் தந்தையிடம் திரும்பி வரும் நேரமிது. தந்தையை விட்டு தூர விலகிச்சென்று, இன்று, வெறுங்கையராகவும், இதயத்தில் மகிழ்ச்சியற்றவராகவும் நிற்கிறோம். நடைபயில முயலும் சிறு குழந்தைபோல் நாம் நம் வாழ்வில் பலமுறை விழுகிறோம். அப்போதெல்லாம், ஒரு தந்தையைப்போல், நம்மை மன்னித்து தூக்கிவிடுகிறார் இறைவன். அந்த மன்னிப்பைப் பெற, நம் பாவ அறிக்கைத் தேவைப்படுகின்றது. அதுவே நமது முதலடி. குணம் பெற்ற பத்து தொழுநோயாளர்களுள், இயேசுவுக்கு நன்றியுரைக்க வந்த ஒரு தொழுநோயாளர்போல், நாமும் இயேசுவை அணுகி குணம்பெறுவதோடு அவரால் மீட்கப்படவும் முன்வருவோம். ஏனெனில், நம் பாவப்பிடிகளிலிருந்து நம்மால் மட்டும் தனியாக வெளிவந்துவிட முடியாது, இயேசு எனும் மருத்துவர் நமக்குத் தேவை.


மீண்டுமொருமுறை, நாம் தூய ஆவியாரிடம் திரும்பிவர அழைப்புப் பெற்றுள்ளோம். நம் நெற்றியிலிருக்கும் சாம்பல், நாம் மண்ணாயிருக்கிறோம், மண்ணுக்கேத் திரும்புவோம், என்பதை நினைவூட்டுகின்றது. இந்த மண்ணின் மீதுதான் இறைவன் தன் வாழ்வின் ஆவியை ஊதினார். ஆகவே, நாம் இந்த மண்ணை நாடி ஓடாமல், அதாவது, இன்றிலிருந்து நாளை அழிந்துபோகும் பொருட்களை நாடாமல், வாழ்வை வழங்கவல்லவரான தூய ஆவியாரை நோக்கிச் செல்வோம்.

அன்பு சகோதரர்களே சகோதரிகளே, இறைவனை நோக்கிச்செல்லும் நம் பயணம் இயலக்கூடியதே, ஏனெனில், முதலில் அவரே நம்மை நோக்கி வந்துள்ளார். நம்மைக் கைவிட அல்ல, மாறாக, நம் பயணத்தில் உடன் வரவே அவர் கீழிறங்கி வந்தார். அவர் நம் கரம் பற்றி நம்மை இந்த பயணத்தில் அழைத்துச் செல்ல அவரை அனுமதிப்போம்.

நம் பாதையில் இறைவனோடு ஒப்புரவாக வேண்டிய தேவை..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# உண்மை உறைக்கும்



# அன்பிய ஆண்டிற்கான கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் சுற்று மடல்

**அருட்பணியாளரே, சகோதர சகோதரிகளே,**

ஆறாம் பவுல் திருத்தந்தை மறைத்தூதுப்பணிபற்றி எழுதிய அப்போஸ்தலிக்க சுற்றுமடலில் அதாவது Evangelii nuntiandi எனும் சினோட் அமர்வின் பின், ஆய்வு ஆணவத்தில் 1975 மார்கழி 8ஆம் திகதி இடம்பெற்ற ஆயர்களின் சினோட் பேரவையின்போது 1974ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளின் சுருக்க அறிக்கைக்கமைய அன்பியங்கள் கிறிஸ்தவர்களை ஒன்று சேர்க்கும் செயற்பாட்டிற்கு உதவுவதாக திருத்தந்தை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நற்செய்திக்கு செவிமடுப்பவர்களாக அவர்கள் மறைப்பரப்புப்பணியின் விசேட பயனாளிகளாக இருப்பதுடன் நற்செய்தியை உலகிற்கு பறைசாற்றும் தூதர்களாகவும் இருக்கின்றார்கள். (EN58) பிற்காலப்பகுதியில் தூய இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் திருத்தந்தை மறைத்தூதுப்பணிப்பற்றிய 1990ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட Redemptoris missio சுற்றுமடலில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்தும் அன்பியங்கள் “கிறிஸ்தவ வாழ்வின் தன்மைக்கு மற்றும் கிறிஸ்தவ மறைத்தூதுப் பணிக்கு சிறந்த மையமாக மாறிக்கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.” (RM51) அவர் மேலும் கூறியது, இவைகள் கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய குழுக்கள், குடும்பம் என்னும் நிலையில் அல்லது அத்தகைய வரையறுக்கப்பட்ட நிலைகளில் செபித்தல், இறைவார்த்தையை வாசித்தல், மறைக்கல்வி மற்றும் மனிதாபிமான திருச்சபையை மையப்படுத்திய சிக்கல்களுக்கான அர்ப்பணமாகும். பொதுவாக அர்ப்பணிப்பு மிக்க உணர்வுடன் கலந்துரையாடும் குழுக்களாக நிறுப்படுகின்றன. இந்த அன்பியங்கள் திருச்சபையின் செயற்பாட்டின் அடையாளமாவதோடு, கிறிஸ்தவ வாழ்வின் தன்மையைபோன்று மறைத்தூதுப்பணியின் கருவிகளாக அவைகள் அன்பின் நாகரீகத்தில் அடித்தளமிடப்பட்ட புதிய சமூகத்தை உருவாக்கும் ஆரம்பத்தின் தோற்றமாகும்.

## அன்பியம் மற்றும் சுதேச திருச்சபை

1995ம் ஆண்டு இலங்கைத் திருச்சபையின் ஒருங்கிணைந்த முயற்சியின் பிரதிபலனாகிய தேசிய மேய்ப்புப்பணி மாநாட்டினால் இலங்கையில் நிலைக்கொண்டுள்ள திருச்சபையில் இறைசித்தத்தை அறிந்துக்கொள்வதற்காக இலங்கையின் மறைமாவட்டங்களிடம் இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டது.“அனைத்து பங்குகளிலும் அன்பிய குழுக்கள் நிறுவப்பட வேண்டியதுடன், அவைகளை இறை மக்களின் ஆன்மீக மற்றும் ஒழுக்கம் நிறைந்த வாழ்விற்கு வழிநடாத்தி, இறைவார்த்தையுடன் செபிக்கின்ற, ஒருவருக்கொருவர் இரக்கத்துடன் மற்றும் ஒற்றுமையுடன் உதவிப்புரிந்து இறைவார்த்தையின்படி வாழ்வதற்காக ஆதரிக்கப்படுகிறது. (காண்க இல. 06 பொது நிலையினர் அப்போஸ்தலிக்கப் பணி)

ஆசிய ஆயர் பேரவையினால் 1995ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸ் மனிலா நகரில் நடைபெற்ற அமர்வின்போது இந்த அன்பியங்கள் “திருச்சபை புது வழி அடைவதன்” முறை என கூறப்பட்டது. அவ்வாசிய ஆயர் பேரவையின் செயல்முறையை தழுவி 25 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் இலங்கையிலும் தேசிய கத்தோலிக்க பொதுநிலையினர் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்த அன்பியங்கள் நிறுவப்பட்டு மற்றும் வலுவூட்டப்பட்டுள்ளது. உண்மையாகவே கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் நாங்கள் பரவலாக அறிமுகம் செய்யும் அன்பியங்கள் அல்லது சிறிய கிறிஸ்தவ குழுக்கள் ஆசிய ஆயர் பேரவை தீர்மானிக்கும் முன்னரே எமது மறைமாவட்டத்தில் கொழும்பு பேராயர் அதிமேதகு நிக்லஸ் மார்கஸ் ஆண்டகையினால் 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவை முதலில் அறிமுகம் செய்யப்பட்டன. பேராயர் அதிமேதகு நிக்லஸ் மார்கஸ் ஆண்டகை பங்கு மேய்ப்புப்பணி சபையினை மீண்டும் நிறுவுவதற்காக அன்பிய குழுக்களினூடாக தோன்றும் தலைவர்களின் பிரதிநிதித்துவத்தில் தெரிவுசெய்யக்கூடியவாறு ஏற்படுத்தினார். இந்த முறையானது கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் 40 ஆண்டுகாலமாக நடைபெற்றுள்ளது.

## ஆழமான முயற்சியின் அவசியம்

எவ்வாறாயினும் இந்த அன்பியங்கள் தற்போது பங்குகளில் நிறுவப்பட்டு நடாத்தப்பட்டு வந்தாலும், தற்போது அதன் செயற்பாடுகள் பற்றிய ஆழமான புரிதலுடன் திருச்சபையின் உற்சாகத்தையும் ஆர்வத்தையும் எல்லா நிலைகளிலும் தீவிரப்படுத்திக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

சில பங்குகளில் இந்த அன்பியங்கள் மிகவும் வலிமைவாய்ந்து செயற்பட்டு வந்தாலும் இன்னும் அநேக பங்குகளில் வெறுமனே பங்கு மேய்ப்புச் சபையின் பங்கேற்புடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், வட்டார ரீதியில் அல்லது அலகுகள் ரீதியில் செயற்படுவது மிக குறைவாகவே காணப்படுகின்றது. இந்த நோக்கத்தில் ஆன்மீக மலர்ச்சியை ஏற்படுத்தும் பிரதிபலன்மிக்க செயல்முறையாக இதை அறிந்துக்கொண்டு அவற்றை மேலும் உயிரூட்டம் பெறச் செய்தல் மற்றும் நிலைப்படுத்துவதற்காக இலங்கை ஆயர் பேரவையினால் அதற்கான ஒரு ஆண்டை அர்ப்பணிக்க தீர்மானித்து இந்த ஆண்டை தூய யோசேப்பு திருவிழா தினத்தன்று அதாவது 2021ம் ஆண்டு தை மாதம் 16ம் திகதி தொடங்கி 2022ம் ஆண்டு தூய யோசேவ்வாஸ் திருவிழா தினம் வரையான காலப்பகுதி அன்பிய ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் நாங்கள் இலங்கை ஆயர் பேரவையின் தீர்மானத்திற்கிணங்க இந்த விசேட ஆண்டை ஏற்பாடு செய்வதற்காக ஆழமான செபத்தில் ஈடுபட்டு, அன்பியங்களை புதுப்பித்து, அவற்றிக்கு தலைவர்களை தெரிவுசெய்து பயிற்சியளித்தல் அவர்களுக்கு வழிகாட்டுதல் அல்லது அன்பியங்கள் செயலிழந்து அல்லது செயற்படாதிருக்கும் இடங்களில் அவற்றை புனரமைத்து எமது இறைமக்களில் புத்துணர்வை ஏற்படுத்த வழிவகுப்பதாகும். இந்த எதிர்நோக்கை அடைவதற்காக கொழும்பு உயர் மறைமாவட்டமானது கீழே தரப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்தவுள்ளது.

## பிரகடனப்படுத்தல்

இந்த விசேட ஆண்டை கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கும் நிகழ்வானது 2021 பங்குனி 20ம் திகதி சனிக்கிழமை கொழும்பு 08, சகல புனிதர்கள் தேவாலயத்தில் மாலை 6.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் கூட்டுத்திருப்பலியின்போது பிரகடனப்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டை பிரகடனப்படுத்தும் அறிக்கை பத்திர வாசிப்பு திருப்பலியின்போது மிக விசேடமாக நடைபெறும்.

ஆகவே கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் அனைத்து குருக்கள், விசேட விதமாக பங்குத்தந்தையர்கள், அப்போஸ்தலிக்கப் பணியகங்கள், மற்றும் நிறுவனங்கள் அதாவது கத்தோலிக்க பாடசாலை ஆகிய இடங்களில் அன்பிய ஆண்டை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செப அட்டைகள், சுவரொட்டிகள், பதாதைகள், மற்றும் தேவையான ஆவணங்கள் தேசிய மட்டத்தில் தயாரித்து இலச்சினையுடன் அச்சிடப்பட்டு, கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு காரியாலயங்களில் வழங்கப்படும்.

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் எல்லா குருக்களும் இதனையொட்டி பிரதான ஆலயங்களில் திருப்பலி நிறைவேற்றி இந்த அன்பிய ஆண்டை பிரகடனப்படுத்தும் அறிக்கை பத்திரத்தை வாசிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இந்த அறிக்கை பத்திரத்தையும் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு காரியாலயத்தில் பொற்றுக்கொள்ளலாம்.

இந்த வழிபாடுகள் ஒழுங்கு செய்யப்படும்போது கோவிட் - 19 தொற்றுநோய் மத்தியில் சுகாதார அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய இவை ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

## அன்பிய ஆண்டிற்கான வழிகாட்டல்கள்

1. கொழும்பு உயர்மறைமாவட்ட விசுவாச உயிரூட்டல் குழுவின் பணி இந்த ஆண்டு முழுவதும் முழுமையாக இச்செயற்பாட்டிற்காக அர்ப்பணிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அன்பியங்களை மேம்படுத்த இயக்குனர் அருட்தந்தை, வட்டார ஒருங்கிணைப்பாளர் ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி எனது ஆலோசனையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள கொழும்பு உயர் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் குழுவினால் இந்த நோக்கங்களை அடைவதற்காக அனைத்து முயற்சிகளும் செயற்படுத்தப்படும்.
2. இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்காக கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயரின் ஆலோசனையின் கீழ் இயங்கும் மறைமாவட்டக் குழுவினால் விளம்பரப் பொருட்களை தயார்படுத்துவதற்கு, விசுவாச உயிரூட்டல் குழுவினதும், மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தையின் வழிகாட்டுதலின் கீழ் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.
3. கொழும்பு உயர்மறைமாவட்ட கத்தோலிக்க அச்சகமும் தொலைதொடர்பாடல் நிலையமும் இணைந்து இவ்வாண்டில் செயற்படுத்தும் செயற்பாடுகள் பற்றி விசேடவிதமாக பொதுநிலை மக்களின் திருமுழுக்கு அழைப்பு, தலைமைத்துவம், விசுவாச அனுபவத்தை பகிர்தல், மற்றும் அன்பியங்களின் செயற்பாடுகள்பற்றி மக்களுக்கு கேட்டல், பார்த்தல் ஊடகங்கள் வழியாகவும், இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு தேவையான தகவல்கள் அதற்கான விசுவாச உயிரூட்டல் குழுவின் விசேடவிதமான பங்களிப்பு வழங்கப்படும் ஊடகத் திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது.
4. அன்பிய ஆண்டுக்காக அறிமுகப்படுத்தியுள்ள பாடல் மற்றும் இலச்சினை ஆயர் பேரவையினால் குறிப்பிட்டுள்ளவாறு கொழும்பு உயர் மறைமாவட்ட திருவழிபாட்டு காரியாலயம் அதை தயாரித்து வழங்கும். இந்த ஆண்டை ஆரம்பிக்க தேவையான திருவழிபாட்டு அறிக்கைப்பத்திரம் கொழும்பு உயர் மறைமாவட்ட திருவழிபாட்டு காரியாலயத்தில் வழங்கப்படும்.
5. கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் அன்பியங்களின் செயற்பாடுகளை உயிரூட்டம் பெறச் செய்வதற்காக மட்டக்குளி புனித ஜோன் வியானி நிலையத்தில் மறைத்தூதுப்பணிகள் காரியாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தேவைப்படுமாயின்கொழும்பு உயர்மறைமாவட்ட ஆயர் இல்லத்திலும் அமைக்கப்படும்.
6. கொழும்பு உயர்மறைமாவட்ட அன்பிய இயக்குனர் அருட்தந்தை அருட்பணி. பெசில் விக்கிரமசிங்க அடிகள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தையர்கள், விசுவாச உயிரூட்டல் குழுவின் உதவியுடன் தலைவர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகள் நடாத்தப்படும்.
7. வட்டார ரீதியில் குருக்களின் கூட்டம் இடம்பெறும்போது இந்த நிகழ்ச்சி திட்டத்தைப்பற்றி கலந்துரையாட தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், வட்டார குருக்களின் மேற்பார்வையின் கீழ் அன்பியங்களை நிறுவுதல் அல்லது புதுப்பித்தல், தலைவர்களை தெரிவுசெய்தல் மற்றும் குருக்களின் ஒத்துழைப்புடன் இந்த நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்துதல், வாக்குறுதி வழங்குதல் மற்றும் ஒவ்வொரு அன்பிய கூட்டத்தை ஆரம்பித்தல் ஆகியவை தயார்ப்படுத்தப்பட வேண்டும். இந்த ஓராண்டு திட்டம்பற்றி தீர்மானங்கள் எடுப்பதற்காக விசேட குருக்களுக்கான கூட்டம் மாசி மாதம் 22ம் திகதி ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
8. ஒவ்வொரு பங்குகளிலும் அன்பிய கூட்ட அறிக்கை, தகவல்கள் மற்றும் தொடர்புக்கொள்ளக்கூடிய விபரங்கள் விலாசம் ஆகியவை பங்கு, வட்டார மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட அலுவலக ரீதியில் சேகரித்து வைத்திருக்கப்படல் வேண்டும்.
9. இந்த நிகழ்ச்சி திட்டத்தை, ஓராண்டு அட்டவணையை பங்கு, வட்டார மறைமாவட்ட ரீதியில் நடாத்தப்படும் வெவ்வேறு நிகழ்ச்சிகள், ஞான ஒடுக்கங்கள், திருயாத்திரைகள் அல்லது மாநாடுகள் ஆகியவை மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருட்பணியாளரால் விசுவாச உயிரூட்டல்குழுவோடு கலந்துரையாடப்படடு திட்டமிடப்பட வேண்டும்.
10. அன்பியங்களை நிறுவுதல் மற்றும் வழிகாட்டுதல் குறித்து முன் அனுபவம் உள்ள குருக்கள் மற்றும் முன்னைய ஒருங்கிணைப்பாளர் குருக்களின், விசுவாச உயிரூட்டல் குழுவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
11. இயன்றளவு வட்டார ரீதியில் பங்கு ரீதியில் ஊக்குவிப்பாளர் குழுவை உருவாக்குதல் வழியாக பயிற்சித் திட்டங்கள் மற்றும் அன்பியங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க முயற்சி செய்யவேண்டும்.
12. இந்த அன்பிய ஆண்டில் பொது நிலையினர் தலைவர் குழுவொன்றை உருவாக்கி ஒருங்கிணைப்பாளர் குருக்களுடன் இணைந்து அன்பிய நிகழ்ச்சி திட்டத்தை மற்றும் அதன் வளர்ச்சி அறிக்கை ஆகியவற்றை குறித்து மேற்பார்வை செய்ய வேண்டும்.
13. மறைமாவட்டத்தில் அனைத்துப் பணிகளில் ஈடுபடும் குருக்கள் அன்பிய வளர்ச்சி திட்டத்திற்காக முழுமையான ஒத்துழைப்பை வழங்கி தலைவர்களை பயிற்றுவித்தல் மற்றும்..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

தவக்காலம் என்றாலே நம் வாழ்வு மேன்மை பெற நமக்கு கொடுக்கப்படுகின்ற ஓர் அரிய வாய்ப்பு. கடவுள் தம் மகன் மூலமாக இந்த உலகிலே நிறைவேற்றிய மீட்புப் பணியை நாம் நினைவுக்கூர்ந்து அதை ஒரு கொண்டாட்டமாகவே முன்னெடுத்து பாஸ்கா விழா பெரு மகிழ்ச்சியை உயிர்ப்புப் பெருவிழாவாக கொண்டாடுவதற்கு நம்மையே தயார்படுத்திக் கொள்வ-தற்கு நமக்கு வழங்கப்படுகின்ற ஓர் அருளின் காலம். இயேசுவின் பாடுகளைப் பற்றி தியானிக்கின்றபோது இதற்கு காரணமான நம் பாவ நிலையைக் குறித்து தியானிக்கவும், மனமாற்றம் அடைந்து அருள் வாழ்வில் வளர்வதற்கும் அதில் நிலைத்து நிற்பதற்கும், இத்தவக்காலம் நம்மை அழைக்கின்றது. மனமாற்றம் பெற விவிலியத்திலிருந்தும் நடைமுறை வாழ்க்கையில் இருந்தும் நமக்கு பல முன்மாதிரிகள் தரப்படுகின்றன. அதற்கு இயேசு சக்கேயு சந்திப்பின் நிகழ்வில் இருந்து மனந்திரும்பி மனிதன் மனமாற்றம், அதனால் அவனுக்கு கிடைத்த கடவுளின் மீட்பு பற்றி இத்தவக்காலத்தில் சிந்திக்க ஒரு வாய்ப்பு.

## இயேசுவும் – சக்கேயுவும் சந்திப்பு

சக்கேயு என்பவர் யோர்தான் பள்ளத்தாக்கில் இருந்த எரிக்கோ என்னும் வளமையான, வணிக நகரத்-திலே வரிதண்டுவோருக்கு தலைவராக இருந்தவர். அவர் ஒரு செல்வந்தர். எருசலேம் நகரத்திற்கான இரண்டு முக்கியமான வழித்தடங்களில் எரிக்கோவும் ஒன்று. அவ்வழியே ஆயிரக்கணக்கானோர் எருசலேம் நோக்கிப் பயணிப்பர். இயேசுவும் அவ்வழியே பயணம் செய்தார்.

சக்கேயு என்னும் வரிதண்டுபவர் பணக்காரராக இருந்தாலும், அவருடைய சமுதாயத்தில் மதிப்பற்றவராக இருந்தார். பணத்தை சேர்த்து வைத்தாரே ஒழிய புண்ணியத்தை சேர்த்து வைக்கவில்லை. உயர்பதவியில் இருந்தாலும், சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்-படவில்லை. உடலமைப்பில் மட்டுமல்லாமல் எல்லா விதங்களிலும் குட்டையாகத்தான் பார்க்கப்பட்டார். நம்முடைய சமுதாயத்திலும் நேரிய வழியில் அல்லாது செல்வம் சேர்த்தவர்களின் நிலையும் இவ்வாறே. முகத்தளவில் பேசினாலும், பின்புறத்தில் அவரைப் பற்றி குறைவாகத் தான் பேசுவார்கள். நேரிய வழியில் செல்வம் சேர்க்காதவர்கள் நிம்மதியாக இருக்க முடியாது.

## சந்திப்பு : மனித முயற்சியும் கடவுளின் அருளும்.....

சக்கேயு என்னும் வரிதண்டுவோருக்கான தலைவர், எருசலேம் நோக்கி எரிக்கோ வழியாக பயணப்-பட்ட இயேசுவைக் காண விரும்பினார். சமுதாயத்தில் தன் நிலை குறித்து அறிந்து வருத்தப்பட்டவரான சக்கேயு அந்நிலையில் இருந்து மாறுவதற்காக வாய்ப்பைத் தேடினார். வரிதண்டுவோர், பாவிகள், யாவரும் இயேசு சொன்னதைக் கேட்க அவரிடம் நெருங்கி வந்ததையும்” (லூக் 15) இயேசுவின் சீடர்களுள் தம்மைப் போன்ற வரிதண்டுபவரும் மனமாற்றம் பெற்று இயேசுவின் மீட்புப் பணியில் தன்னையும் இணைத்துக் கொண்டிருக்கின்றார் என்பதை அறிந்திருந்தார் சக்கேயு. அதனால் “அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்திமரத்தில் ஏறிக் கொள்கின்றார் (லூக் 19:4) சக்கேயுவின் இயேசுவை காண துடிக்கும் தேடல் முழுமையானதும் நிறைவானதுமாகும். இத்தவக்கா-லத்தில் நம்முடைய மனமாற்றத்திற்கான ஆர்வமும் ஆசையும் எந்த வகையான தேடல் மூலமாக இயேசு-வைக் காண அமைகின்றது என்று சிந்திப்போம்.

சக்கேயு இயேசுவைக் காண எடுத்த முயற்சிக்கு அவருக்கு கிடைத்த பலன் இயேசுவே அவரை தேடி வந்து பெயர் சொல்லி அழைக்கின்றார். “சக்கேயுவே விரைவாய் இறங்கி வா, இன்று உனது வீட்டில் நான் தங்க வேண்டும்” (லூக் 19:6) என்று பெயர் சொல்லி அழைத்தார். இயேசுவாகவே முன்வந்து இயேசுவை சந்தித்து அவரிடம் மாற்றத்தை ஏற்படுத்துகின்றார். ஒரு பாவிக்கு மாற்றம் கொடுத்து, மறுவாழ்வு கொடுத்து, மனமாற்றம் பெற அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை இயேசு ஏற்படுத்திக் கொடுக்கிறார். வரிதண்டுவோருக்கு தலைவர், செல்வர், சமூகத்தில் உயர்ந்த நிலை, அதிகாரம், என்று பல இருந்தும் மக்கள் தம்மை இகழ்ச்சிக்குள்ளானாலும் பரவாயில்லை என்று மரத்தில் ஏறினார். இங்கே மனித முயற்சியும் கடவுளின் அருளும் இணைந்து சந்தித்து கடவுளின் மீட்பு நிறைவாக வெளிப்படுவதைக் காண்கின்றோம்.

ஆம், உண்மையான மனமாற்றத்திற்காக நம்பிக்கையோடு கடவுளிடம் ஒரு அடி எடுத்து வைத்தால் கடவும் தம் அருளால் அதை பெரிய வெற்றியாக, நமக்கு அவரது மீட்பை தருவார் என்பதை நாம் மறக்க-க்கூடாது. சக்கேயுவைப்போல் எமது மனமாற்றத்திற்கு தடையாயிருக்கிற அனைத்திலும் இருந்து மீண்டு வரவேண்டும்.

## விரைவாய் இறங்கிய சக்கேயு

இயேசுவை சந்தித்த சக்கேயு அவருடைய வீட்டிலே கூடியிருந்தவர்களின் முன்னிலையில் தனது மனமாற்ற அறிக்கையை விடுக்கிறார். “ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்து விடுகிறேன்...” என்று தொடங்கி தாம் செய்த பாவத்தி-ற்கு பரிகாரம் தேடிக் கொண்டு புதுவாழ்விற்கு தயாரா-கின்றார். இவரின் மனமாற்றம் இவரின் பரிகாரம், சட்டத்தையும் தாண்டி பிறரன்புப் பணிகளில் ஈடுபடச் செய்தது. அவரது இந்த பிறரன்புப் பணி, இயேசுவையோ அல்லது அங்கு கூடியிருந்தவர்களையோ கவர வேண்டும் என்பதற்காக அல்ல, மாறாக இயேசுவை இவ்வளவு நெருக்கமாக, தாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக சந்திக்க வாய்ப்பு கிடைத்ததற்கு நன்றியாக இதைச் செய்தார். “மனம் மாறியவர்கள் என்பதை அதற்கேற்ற செயல்களால் காட்டுங்கள்” (லூக் 3:8) என்ற திருமுழுக்கு யோவானின் வார்த்தைகளுக்கேற்ப தம்முடைய மனமாற்றம் அதற்கேற்ற செயல்களில் வெளிப்பட வேண்டும். அதுவே நாம் மீட்பு பெற காரணமாக மாறும்.

சக்கேயுவோடு நம்முடைய மனித வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது அவரைப் போன்று நாமும் பாவநிலையிலே ஆண்டவர் இயேசுவின் மீட்புக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த மீட்புக்கான தேடல், சந்தித்தல், மனமாற்றம் பெறுதல், பின்பற்றுதல் என்று பலபடி நிலைகளை நாம் கடக்க வேண்டும். “பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம். உண்மையும் நம்மிடம் இராது” (1யோவா 1:8) என்பதற்கேற்ப நம்முடைய உண்மை நிலையை, பாவ சூழ்நிலைகள் நிறைந்த நம்முடைய மனித வாழ்வின் யதார்த்தத்தை உணர்ந்தவர்களாக அதை மாற்ற முயற்சி செய்கிறபோது சக்கேயுவைப் போல நாமும் கடவுளின் மீட்பின் கொடைகளை நிறைவாக பெறலாம். சக்கேயு வெட்கப்படாமல் மரம் ஏற முடிவெடுத்துவிட்டது போன்று நாமும் இயேசுவை பார்க்கத் தடையாக இருப்பவைகளைத் தாண்டி இயேசுவைப் பார்க்க முயற்சி எடுப்போம். நம்முடைய தேவையற்ற அனைத்திலிருந்தும் இறங்கி வருவோம். இந்த தவக்காலம் நமக்கு உதவி செய்யபட்டும்.

# விரைவாய் இறங்கி வா



ந
ம
து

← நான் எனும் அகந்தையில் இருந்து
← வெளிப்புற தூய அடையாளத்திலிருந்து
← பாவநாட்டங்களிலிருந்து
← அலங்காரத்தனமான ஆன்மீகத்திலிருந்து
← அரியணைகளிலிருந்து
← மொழி மற்றும் மதவெறியிலிருந்து
← அடுத்தவர் சார் அக்கறையின்மையிலிருந்து
← கடவுளை கண்டும் காணாமல் வாழ்வதிலிருந்து
← அடுத்தவரின் மேல் அக்கறையின்றி வாழ்வதிலிருந்து
← நமதுஉண்மைத்தன்மையில்லாபோலிவாழ்க்கையிலிந்து இறங்குவோம்.

தவக்காலத்தில் நாம் கீழே இறங்குதலும், அதிலும் தாழ்ச்சியோடு இறங்குதலும் மிகவும் முக்கியமானதொன்று இது மிகவும் எளிதான ஒன்றல்ல, கடினமானதே. நாம் மாற கடவுள் துணை வேண்டும். தவக்காலத்தில் விருப்பமுடன் கூடிய மனமாற்றத்திற்காக இறைவனின் துணை வேண்டி கடவுளுடன் இணைந்து பயணிப்போம்.

# தூய சூசையப்பரின் யூபிலி ஆண்டையொட்டிய சிறப்புத் தொடர் - 2

(08.12.2020 - 08.12.2021)



ஆக்கம். அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்.

தூய சூசையப்பரை போற்றுதற்குரிய தந்தையாக ஏற்று வணக்கம் செலுத்தும் திருச்சபைகளான எமது கத்தோலிக்க திருச்சபையும், அங்கிலிக்கன் திருச்சபையும், கிழக்கு மரபு வழித்திருச்சபையும் (Eastern orthodox church), லூத்திரனியத் திருச்சபை (Lutheranism), மெதடிஸ்த திருச்சபை (Methodist Church), ஓரியண்டல் மரபு வழித் திருச்சபை (Oriental Orthodox Church) காணப்படுகின்றன. தூய சூசையப்பர் இயேசுக்கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையாகவும், அன்னை மரியாளின் கணவராகவும், பாரம்பரிய கிறிஸ்தவ பிரிவுகளில் மிகப்பெரிய புனிதராகவும், பெருந்தந்தையர்களில் (Patriarch) ஒருவராகவும் மதிக்கப்படுகின்றார்.

இவருடைய எடுத்துக்காட்டான வாழ்வின் மூலமாகத்தான் இவருக்கென ஒரு ஆண்டினை ஒதுக்கி, இவரைப் பற்றி, இவரது தந்தைக்குரிய பண்பைப் பற்றி, தற்போதைய குடும்ப வாழ்வைப் பற்றி, குடும்ப வாழ்விலே ஒரு தந்தை வகிக்கும் இடம் பற்றி எடுத்துக் காட்ட திருத்தந்தை பிரான்சிஸ் திடசங்கற்பம் பூண்டுள்ளார். எனவே அவருடைய வாழ்வு பற்றி நாம் தெரிந்த நிகழ்வுகளை முதலில் மீட்டல் செய்துவிட்டு பின்னர் தெரியாதவற்றுக்குள் செல்வோம்.

தூய சூசையப்பர் தாவீது அரசரின் வழிமரபில் தோன்றியவர். இவரது தந்தை ஏலி என்கின்ற யாக்கோபு

## தூய சூசையப்பரின் ஆரம்ப வரலாறு

ஆகும். நாசரேத்தூரில் வாழ்ந்து வந்த இவர் தச்சுத் தொழில் செய்து வந்தார். தாவீது குலத்து அழகிய கன்னிப் பெண்ணான மரியாளுடன் இவருக்குத் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது. அவ்வேளையில் மரியாள் தூய ஆவியின் வல்லமையால் இறைமகன் இயேசுவைக் கருத்தாங்கும் பேறுபெற்றார். மரியாள் திடிரெனக் கருவுற்றதால் இவர் மிகவும் மனக்குழப்பம் அடைந்தார். நேர்மையாளரான இவர் மரியாளை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாக விலக்கிவிடத் தீர்மானித்தார். மரியாள் கடவுளின் திருவுளத்தால் இறைமகன் இயேசுவைக் கருத்தாங்கி இருப்பதை வானதூதர் வழியாக அறிந்த இவர் மரியாளை ஏற்றுக்கொண்டார்.

இயேசு பெத்தலேகம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த வேளையிலும், அவரைக் கோவிலில் ஒப்புக்கொடுக்க ஜெருசலேம் சென்றவேளையிலும், ஏரோது அரசன் அவரைக் கொல்லத் தேடியபோதும் மரியாளையும் குழந்தை இயேசுவையும் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் தூய சூசையப்பர் பாதுகாத்தார். பன்னிரண்டு வயதில் இயேசு ஜெருசலேம் ஆலயத்தில் தங்கிவிட்ட பொழுது இவர் மிகுந்த கவலையுடனும், மன அழுத்தத்துடனும் தேடி அலைந்து அவரைக் கண்டுபிடித்தார். தனது தொழிலான தச்சுத் தொழிலின் மூலமே குடும்பத்தைக் காப்பாற்றினார். மரியாளும் நெசவுத் தொழிலின் மூலம் இவருக்கு உதவினார்.

தந்தை தனது தொழிலை மகனும் அறிந்துகொள்ள அவருக்கும் கற்றுக் கொடுத்தார். மரியாளுக்கு நல்ல கணவராகவும், இயேசுவுக்கு நல்ல தந்தையாகவும் இவர் விளங்கினார். சிறந்த வாய்மையும், பொறுமையும் கொண்ட இவர் திருக்குடும்பத்தைச் சிறப்பாகத் தலைமைதாங்கி வழிநடத்தினார். இயேசு தனது இறையரசுப் பணியைத் தொடங்குவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு இயேசுவும் மரியாளும் அருகில் தூய சூசையப்பர் பாக்கியமான நல்ல மரணம் அடைந்தார். எனவேதான் இயேசுவின் சிலுவைப் பாடுகளில் இவர் எங்குமே காணவில்லை. இதையறியாத எம்மிலே பலர், அவருக்கு இயேசுவைப் பற்றி அக்கறையில்லை.

**மரியாளுக்கு நல்ல கணவராகவும், இயேசுவுக்கு நல்ல தந்தையாகவும் இவர் விளங்கினார். சிறந்த வாய்மையும், பொறுமையும் கொண்ட இவர் திருக்குடும்பத்தைச் சிறப்பாகத் தலைமைதாங்கி வழிநடத்தினார்.**

இயேசுவுக்கு வளர்ப்புத்தந்தை என்பதால் உதாசீனமாக, பொறுப்பில்லாமல் நடந்து கொண்டுள்ளார் என்றெல்லாம் விமர்சனம் செய்கிறார்கள்.

கத்தோலிக்க திருச்சபையிலே கிறிஸ்தவ புனிதர்களில் அன்னை மரியாளுக்கு அடுத்ததாக தூய சூசையப்பர் வணங்கப்படுகின்றார். கிறிஸ்தவ வரலாற்றின் தொடக்க காலம் முதலே இவர் புனிதராகப் போற்றப்படுகின்றார். இவர் அகில உலகத் திருச்சபை, கற்பு, கல்வி, திருமணம், குடும்பங்கள், நல்ல மரணம், தொழிலாளர், பொறியியலாளர்கள் போன்றவற்றுக்குப் பாதுகாவலராக விளங்குகின்றார்.

"பிதாப்பிதாவாகிய தூய சூசையப்பர்" இது அவருக்கே உரிய அடைமொழி முன்பு செபமாலை சொல்லியபின் அதிதூதரான தூய மிக்கேலே, ரப்பியலே, பிதாப்பிதாவாகிய தூய சூசையப்பரே, தூய இராயப்பரே, சின்னப்பரே எங்கள் பாதுகாவலரான (அந்தப் பங்கின் பாதுகாவலரின் பெயரைச் சொல்வது வழக்கம்) என்று தான் செபமாலைத் தியானத்தை முடிப்போம். இன்றும் இந்த வழக்கம் சில இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது. அப்படியாயின் இவர் எவ்வளவு பெரியவர், அவருக்கு எவ்வளவு பெரிய அந்தஸ்து, பேறுபலன்கள், பொறுப்பு, இருக்கின்றது என்று அறிந்து கொள்ளலாம்.

தூய சூசையப்பரின் நவநாள் செபத்தில் இப்படியொரு வாக்கியம் வருகின்றது. "ஓ! எங்களைப் பாதுகாத்தருளும்படி மேலான வல்லமையுள்ளவரே! நரக சத்துருக்களோடு நாங்கள் செய்யும் யுத்தத்தில் நீர் மோட்ச சிம்மாசனத்தில் இருந்து கிருபையால் எங்களைப் பார்த்துத் துணையாய் வருவீராக...." நம் கத்தோலிக்க திருச்சபையிலே அன்னை மரியாளுக்கு அடுத்த படியாக தூய சூசையப்பருக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. விண்ணகத்தில் அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக மகிமையும் முக்கியத்துவமும் வல்லமையும் கொடுக்கப்பட்டிருப்பதும் இவருக்கே என்றால் அது மிகையாகாது.

கத்தோலிக்க திருச்சபையிலே இவருக்கு இரண்டு விழாக்கள் சிறப்பிக்கப்படுகின்றன.

1. **தூய சூசையப்பர் அன்னை மரியாளின் கணவர் – பங்குனி மாதம் 19ம் திகதி.**
2. **தொழிலாளர்களின் பாதுகாவலர் தூய சூசையப்பர் – வைகாசி மாதம் 1ம் திகதி**

நாத்திகப் பொதுவுடைமையாளர்கள் வைகாசி தினத்தை தொழிலாளர்களின் நலனுக்கென முதன் முறையாகக் கொண்டாடினர். இதற்கு முழுமையாகப் பொருள் கிடைக்கும் வகையில் 1955ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் தொழிலாளராக புனித சூசையப்பரின் திருநாளை வைகாசி மாதம் முதலாம் நாளில் கொண்டாடப் பணித்தார். இயேசு ஒரு தச்சுத் தொழிலாளி என்பதற்கு நம் தாய்த்திருச்சபை முக்கியத்துவம் கொடுக்கின்றது. இயேசுவை இப்பணிக்கு உருவாக்கியவர் தூய சூசையப்பரே. மனிதன் தன் கைகளாலும், தன் அறிவாற்றலாலும் கிறிஸ்துவின் மறையுடலைக் கட்டி எழுப்பக் கடமைப்பட்டவன் என்பதை தூய சூசையப்பர் தன் வாழ்வின் வழியாக உணர்த்தியுள்ளார். உழைப்பின் புனிதத்தையும், உழைக்கின்றவர்களுக்கு மேலான மாண்பையும், அதற்கென ஒரு பாதுகாவலரையும் ஏற்படுத்த விரும்பிய திருத்தந்தை 12ம் பத்திநாதர் இந்தத் திருநாளை ஏற்படுத்தினார்.

இன்றைய உலகில் மனிதன் தனது முயற்சியினாலும், திறமையாலும் அடைந்த மாபெரும் வெற்றியை நினைக்க நினைக்க அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. அனைத்து நாட்டு மக்களும் கைகோர்த்து பணியாற்றுகின்றார்கள் என்பது வெற்றிக்கு மூல காரணமாக உள்ளது. உலக மாந்தர் அனைவரும் ஒரு குடும்பத்தினர் போல் சுருங்கி விட்ட காட்சி வியப்பானது புதிய சாதனங்களும், கண்டுபிடிப்புக்களும் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை திருச்சபை உலக மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. கடவுளின் திட்டம். மனித வரலாற்றில் நிறைவேற மனிதன் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டும் என்பதை தூய சூசையப்பர் தன் வாழ்வில் உணர்த்தியுள்ளார். உலகின் பல பகுதிகளிலும் மனித உழைப்பின் மாண்பினைப் பாராட்டும் விழா வைகாசி மாதம் 1ம் திகதி முதல் நாளன்று கொண்டாடப்பட வேண்டுமென்று இத்திருவிழா நிறுவப்பட்டது.

ஏழையாக வாழ்ந்தாலும், ஏற்றம் மிகு வாழ்வு வாழ்ந்தவர். துன்பத்தில் துவண்டாலும் தூய்மையான வாழ்வு வாழ்ந்தவர், கஷ்டங்களுக்கு மத்தியிலும் கண்ணிய வாழ்வு வாழ்ந்தவர். இவ்வாறு வாழ்ந்தவர் தான் தூய சூசையப்பர்



**தொடரும்...**



இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்.

பேதுரு

# இறைவார்த்தை வழிபாடு

## தவக்காலத்தின் 3வது ஞாயிறு (07.03.2021)

**வாசக விளக்கம்:** தவக்காலத்தின் மூன்றாவது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின இறைமக்களாகிய நம் எல்லோருக்கும் இன்றைய ஞாயிறு வாசகங்கள் அனைத்தும் நமக்கு ஒரு புரட்சிகரமான கருத்தையும் தவக்காலத்தில் நாம் செய்ய வேண்டிய காரியத்தையும் கூறுகின்றன. இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு ஜெருசலேம் ஆலயத்தை தூய்மைப்படுத்துகிறார். கடவுளின் ஆலயம் ஒரு சந்தையாக மாறியுள்ளது. அங்கு நடைபெற்ற வியாபாரங்களில் உண்மையும் நீதியும் நேர்மையும் இல்லாத சூழ்நிலை காணப்படுகிறது. இதைப்பார்த்த இயேசு வியாபாரிகளை அடித்து விரட்டுகின்றார். இறைப்பிரசன்னத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு கூட்டமைப்பே ஆலயமாகும். இது இறைமக்களின் நம்பிக்கைக்குரிய இடமுமாகும். இது இறைப்பிரசன்னத்தை அனுபவிப்பதற்கும் ஆன்மீகத்தில் வளர்வதற்கும் மக்களின் ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்தவும் உதவுகின்றன. நமது உடலும் உள்ளமும் இறைவன் வாழும் ஆலயமாக இருக்கவேண்டும். அதில் தற்பெருமை, சோம்பல், பெருந்தீனி, பொறாமை, பேராசை போன்ற குள்ளநரித் தனங்கள் இருக்கக்கூடாது. எனவே விழிப்பாயிருந்து இறைவன் வாழும் இல்லமாகிய எமது ஆலயங்களை தூய்மைப்படுத்த பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : வி.ப 20: 1-17**
திருச்சட்டம் மோசே வழியாக அளிக்கப்பெற்றது.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே, நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 1: 22-25**
சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே பறைசாற்றுகிறோம். அவரது சிலுவை யூதருக்குத் தடைக்கல் அழைக்கப்பட்டவருக்கோ கடவுளின் ஞானம்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்.

**நற்செய்தி வாசகம் : யோவா 2: 13-25**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மனித உள்ளங்களில் படர்ந்துள்ள தீய எண்ணங்களையும் பாவத்தின் தன்மைகளையும் தகர்த்தெறிந்து பாவமற்ற தூய வாழ்வை தன் மக்களுக்கு எடுத்துக்கூறி மக்களை வழிநடத்தும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் இத்தவக்காலத்தில் சிறந்தமுறையில் ஒத்துழைத்து இறைமக்கள் அனைவரும் பாவங்களையும் பாவச் சிந்தனைகளையும் விடுத்து செப தவ ஒறுத்தல் முயற்சிகளில் நடக்க வழிகாட்ட வரமருள வேண்டுமென்று...

நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பத்து கட்டளைகளும் நம்மைப் பயமுறுத்தவோ அடக்குவதற்கோ அல்ல மாறாக நம்மை பாவ வாழ்வில் இருந்தும் ஆன்மீக இருளில் இருந்தும் தூய்மைப்படுத்துவதற்கே என்பதை புரிந்து கொண்டவர்களாக அவற்றைக் கடைப்பிடிக்கவும் நீதிக்கும் உண்மைக்கும் மனித உரிமைக்கும் மாறான செயல்பாடுகளில் இருந்து விலகி நடக்கவும் வரமருள வேண்டுமென்று...

ஜெருசலேம் ஆலயத்தை இயேசு தூய்மைப்படுத்தியது போல் நாமும் நமது உள்ளம் என்னும் ஆலயத்தை தூய்மைப்படுத்த இத்தவக்காலத்தைப் பயன்படுத்தவும், புறத்தூய்மையை விட, அகத்தூய்மையே மேலானது என்பதை உணரவும், பாவி என்றால் யாரெனில் பாவங்களை செய்பவனல்ல தீமைகளை விரும்பி அன்பு செய்கிறவனே என்பதை புரிந்து கொண்டு வாழவும் வரமருள வேண்டுமென்று...

## தவக்காலத்தின் 4வது ஞாயிறு (14.03.2021)

**வாசக விளக்கம்:** இறைமக்களாகிய நாம் இன்று தவக்காலத்தின் நான்காவது வாரத்தில் கால்பதிக்கின்றோம். தவக்காலம் முழுவதும் இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் மையமாக கொண்டிருந்தாலும், இந்த நான்காவது வாரம் மகிழ்ச்சியின் அடையாளம் என்றால் அது மிகையாகாது. காரணம் இன்றைய வாசகங்கள் நமக்கு புது அழைப்பையும், கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் கொடுப்பதாக அமைகின்றன. பாம்பின் விஷமென நமது உள்ளத்திலும், உடலிலும் தீமையும் நோய்களும் நிறைந்திருக்கின்றன. இதோ நமக்கு ஒரு நற்செய்தி அது என்னவெனில் இயேசுவை விசுவாசக் கண்ணோடு உற்றுநோக்கும் அனைவரும் வாழ்வுபெறுவர், குணம் பெறுவர், ஆசி பெறுவர், ஆறுதல் பெறுவர், அமைதி பெறுவர், விடுதலைபெறுவர் என்பதாகும். நாம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என கடவுள் விரும்புகிறார். நமது மகிழ்ச்சி நல்ல அடித்தளங்களை கொண்டு மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். அது அர்த்தம் உள்ள வாழ்க்கையின் வெளிப்பாடாக இருக்கவேண்டும். இயேசு ஒருவரே நமக்கு வாழ்வு, அவர் ஒருவரே நமது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு, அவர் ஒருவரே நமது வியாதிகளுக்கும் மருந்து, அவர் ஒருவரே நமது பாவத்திற்கு கழுவாய், அவரில் விசுவாசம் கொண்டு அவரை நோக்கினால் நாம் மன்னிப்பு பெறுவோம். ஆறுதல் அடைவோம். மகிழ்ச்சி கொள்வோம். நிலைவாழ்வை அடைவோம். இதற்கான அருளை வேண்ட பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : 2 குறிப்பேடு 36: 14-16, 19-23**
ஆண்டவரின் சினமும் இரக்கமும் மக்கள் நாடுகடத்தப்படுதலிலும், அவர்கள் மீட்கப்பெறுவதிலும் வெளியாகின்றன.

**பதிலுரைப் பாடல் :**
உன்னை நான் நினையாவிடில், என் நா மேல்வாயோடு ஒட்டிக்கொள்வதாக!

**இரண்டாம் வாசகம் : எபேசி 2: 4-10**
குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே.

**நற்செய்திக்கு முன் வசனம் :**
தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார்.

**நற்செய்தி வாசகம் : யோவா 3: 14-21**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
எல்லாம் வல்ல இறைவா
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அளவிட முடியாத கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் அனைத்துலக மக்களுக்கும் பறைசாற்றி நற்செய்திப் போதனையை நடத்தும் தூய திருஅவையின் திருத்தந்தை ஆயர்கள் அருட்பணியாளர், துறவியர், பொதுநிலை இறைமக்கள் ஆகிய அனைவரும் இன்றைய உலகப்போக்கிற்கு ஏற்றவாறு தமது பணி வாழ்வை சிறப்புடன் நடத்த தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

புத்துணர்ச்சியும் புதுவாழ்வையும் நோயற்ற நல்வாழ்வையும் மனமாற்றத்தையும் கொடுக்க வல்லவரான இறைவனிடம் நம்பிக்கை கொண்டவர்களாக நாம் வாழவும், எப்பொழுதும் கடவுளின் அன்பையும், இரக்கத்தையும் சுவைப்பவர்களாக நாம் மாறவும் அதை சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்பெறும் விதத்தில் பயன்படுத்தவும் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

இயேசு பேதுருவை உற்றுநோக்கினார் அவர் கண்ணீர் சிந்தி மனம் மாறினார். இயேசு கானாவூரில் தண்ணீரை உற்றுநோக்கினார், தண்ணீர் இரசமானது. இயேசு நம்மை உற்றுநோக்கினால் நாமும் புனிதம் அடைவோம். அதுபோல ஏழை எளியவரை, நோயாளரை நாமும் உற்றுநோக்கி அவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து வாழ வரமருள வேண்டுமென்று...




உப்பாய் ஒளியாய் வாழ்வாய் என்றார்,
தப்பாய் இருளில் வாழாதே என்றார்!

சத்தியங்கள் சொல்லும்படி வாழ்வாய் என்றார்,
சாத்திரங்கள் கூறுவதை கேளாதே என்றார்!

வார்த்தையில் வல்லமையில் வாழ்வாய் என்றார்,
பார்ப்போர் சிரிக்கும்படி வாழாதே என்றார்!

உத்தமனாய் உண்மையாய் வாழ்வாய் என்றார்,
பெத்தமனம் நோகடித்து வாழாதே என்றார்!

சொந்தங்களை நேசித்து வாழ்வாய் என்றார்,
சொத்துக்களில் மனம் வைத்து வாழாதே என்றார்!

மனைவியுடன் இணைந்து வாழ்வாய் என்றார்,
மாற்றானின் மனைவியிடம் வாழாதே என்றார்!

பிறர்குற்றம் மன்னித்து வாழ்வாய் என்றார்,
நெறிகெட்ட பாதையில் வாழாதே என்றார்!

பிறர்சுமை நீ ஏற்று வாழ்வாய் என்றார்,
தரம் கெட்டு போனோருடன் வாழாதே என்றார்!

தன்மான உணர்வோடு வாழ்வாய் என்றார்,
தன்னலத்தில் சுகம் கண்டு வாழாதே என்றார்!

ஏழைக்கு செவிகொடுத்து வாழ்வாய் என்றார்,
தாழ்மையை தள்ளிவிட்டு வாழாதே என்றார்!

போதுமென்ற மனதுடனே வாழ்வாய் என்றார்,
மாது, மது மயக்கத்தில் வாழாதே என்றார்!

விருந்தோம்பல் விரும்பி நீ வாழ்வாய் என்றார்,
கருமியாய் ஒளிந்து நீ வாழாதே என்றார்!

கடன்தந்து உதவிசெய்து வாழ்வாய் என்றார்,
கடல் ஆசை கொண்டு நீ வாழாதே என்றார்!


மனிதகுலம் மீட்படைய வாழ்வாய் என்றார்,
கனியிருக்க காய்கவர்ந்து வாழாதே என்றார்!


இறையரசை தினம் வேண்டி வாழ்வாய் என்றார்,
நிறைவாழ்வை மறந்துபோய் வாழாதே என்றார்!

படைத்தவரை தினம்போற்றி வாழ்வாய் என்றார்,
கிடைத்ததை உண்டுகளித்து வாழாதே என்றார்!

நன்மைக்கு நன்றிசொல்லி வாழ்வாய் என்றார்
தீமைக்கு தீமைசெய்து வாழாதே என்றார்!

தூய ஆவி வரம்கேட்டு வாழ்வாய் என்றார்,
மாய உலகின் மயக்கத்தில் வாழாதே என்றார்!



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பெத்லகேம் நகரின் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து முப்பத்திமூன்று வருடங்கள் மனிதர்களோடு நடந்து திரிந்து, இறுதியில் கல்வாரி மலையில் சிலுவையில் கொலை செய்யப்பட்ட இயேசுவின் குரல் இது. வாழ்வைத் தொலைத்து விட்டு வருத்தமுடன் தேடித் திரிகிற மனிதர்களே, ஆலயங்களில் மட்டுமே ஆண்டவரைத் தேடுகிறவர்களே, சிலுவைப்பாதையை செபமாக மட்டுமே வாசித்து வாசித்துப் பழகிப்போனவர்களே, உங்கள் வாழ்க்கைக்கு எந்த பாதை சிறந்த பாதை என்பதை தேடி திரிகிறீர்களா?

கொஞ்சம் கவனித்து என் இதயத்திலிருந்து நான் கூறும் இந்த செய்திகளை உங்கள் செவிகளில் கேளுங்கள். அதை நெஞ்சத்தில் நிறைத்து வையுங்கள். எனது சிலுவைப்பாதை உங்கள் வாழ்க்கை பாதை-யாகட்டும். எனது பாடுகளை நினைத்து நினைத்து கலங்குவதால் உங்களுக்கு எந்த பயனும் விளையப்-போவதில்லை. எனது பாடுகளில் இருந்து உங்கள் வாழ்க்கைப் பாடத்தை கற்றுக்கொள்ளுங்கள். எனது பாடுகள் இன்னும் முடிந்து போகவில்லை. உலகில் கண்ணீரோடும், கவலையோடும் பயணம் நடத்தும் மனிதர்களில் என் பாடுகள் தொடர்கின்றன.

“சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளில் நான் இருக்கிறேன். என்னை சந்திக்க விரும்புகிறாயா? என்னை பின் தொடர்ந்து வா”

## 1. நீதிமன்றம் தந்த மரண தண்டனை

இறையாட்சியைப் பற்றி எடுத்துச் சொன்னேன். அங்கே இடம் பெறுவோர் யார் யாரென்று திடமாகச் சொன்னேன். போலிகளைப் பற்றி பொதுவில் குறிப்பிட்டேன். கடவுளின் பெயரால் மக்களை ஏமாற்றுகிறவர்களை வெளியில் வேடமிட்டு உள்ளுக்குள் நயவஞ்சகம் கொண்டவர்களை வாயால் சாடினேன். இதற்கு கொலை மிரட்டல்கள் எனக்கு, நேரடியாக கொல்ல சாத்தியம் இல்லாததால் சட்டத்தையும், அதிகாரத்தையும் கையிலெடுத்து கொண்டு ஆட்சியாளர்களின் துணையோடு மரணக் கூண்டில் என்னை ஏற்றினார்கள். என் பக்கம் இருக்கும் நியாயத்தை எடுத்துச் சொல்ல ஒருவர் கூட இல்லை.

நண்பா அப்பாவிகள் மீது ஆணவ அதிகாரங்களை ஏவி விடாதே? அடுத்தவர்களுக்கு தீர்ப்பளிப்பதற்கு முன் உன் அழுக்கை ஒருமுறை திருப்பிப் பார்த்துக் கொள். பிறருக்கு எதிராக வாக்கியம் சொல்லாதே....

**எனது பதில் :**

நான் என் தவறுகளை திருத்திக் கொள்கிறேன். இனி பிறருக்கு எதிராக பேசவோ, செயல்படவோ மாட்டேன். என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளும்.

## 2. என் தோளில் சிலுவையை ஏற்றுகின்றனர்.

நான் சிலுவையை மட்டுமல்ல, ஆளாளுக்கு அடுக்கி வைத்த பழிகளையும் சுமக்கிறேன். சிலுவை-யின் பாரத்தை விட அவர்கள் என்மீது கூறிய குற்றச்சாட்-டுகளும், கொடிய வார்த்தைகளும் என்னை பலமாக அழுத்துகின்றன. எனது தோளை சிலுவை அழுத்த, என் இதயத்தை வேதனை அழுத்த, என்னை ஒழித்துவிட ஓயாமல் உழைத்தவர்களுக்கு நிம்மதியாய் இருக்கிறது.

நீ எத்தனை பேரை சாகடித்து நோகடித்து உன் நிம்மதியை பெருக்கிக் கொள்கிறாய். அடுத்தவர் துன்பத்தில் அகமகிழாதே. உன்னால் பாதிக்கப்பட்டவர்களை நினை-த்துப்பார். உன்னால் வாழ்வில் உயர்ந்தவர்களை நினைத்து பெருமைப்படு, உன்னால் வாழ்வை இழந்து வருந்துவோர்களுக்கு உரிய பரிகாரத்தைச் செய், அதுவரை எனது தோளில் இருக்கும் சிலுவை. என்னை வருத்திக் கொண்டே இருக்கும்.



**எனது பதில் :**

தெரிந்தும் தெரியாமலும் பலபேர் துன்பப்பட நான் காரணமாகிவிட்டேன். பிறருக்கு நான் இனி வருத்தத்தை வருவிக்க மாட்டேன். பிறருக்கு நன்மை செய்ய முயற்-சிப்பேன். உமக்கு ஒருபோதும் சிலுவையாக மாட்டேன்.

## 3. நான் முதல் முறை தரையில் விழுகிறேன்

கனத்த சிலுவை, காயங்களான உடல், தள்ளாடிய கால்கள், எல்லாமுமாக சேர்ந்து என்னை கீழே தள்ளி-விட்டன. பலரும் என்னை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றார்கள். ஆனால் எவருமே வந்து என்னைத் தூ க்கிவிட முயற்சிக்கவில்லை. நானாகவே திக்கித் திணறி ஒருவிதமாக எழுந்துவிட்டேன்.

சிலர் விழுவதற்கு நீயே காரணமாய் இருந்திருக்-கின்றாய்? சதி செயல்களால் பிறருடைய வாழ்க்கையை முடக்கியிருக்கிறாய்? சேர்ந்திருந்து கொண்டே குழி பறித்திருக்கிறாய். உன்னால் தான் விழுந்து கிடக்கிறேன். உன் சதி செயல்களை நிறுத்திவிடு. விழுந்தவர்களின் வரிசையில் என்னைப் பார்.

**எனது பதில் :**

இயேசுவே எனது செயல்கள் உம்மை வீழ்த்தி-விட்டன. விழுந்து கிடக்கின்ற மனிதர்களில் உம்மை கண்டு கொள்ளாமல் ஒதுங்கிப் போய் விடுகிறேன். விழுந்தவர்-களை தூக்கி விடுகிற பொறுப்பு எனக்கு உண்டு என்பதை இப்போது உணருகின்றேன். இனி எப்போதும் பிறருக்கு நன்மை செய்வேன்.

## 4. என் அம்மாவைக் கண்டு மகிழ்கிறேன்.

கண்ணீருக்கு நடுவில் கருணை முகத்தைக் காண்கிறேன். என் அம்மாவின் சந்திப்பு என் பயணத்திற்கு பலம் சேர்க்கிறது. என் களைப்பெல்லாம் காணாமல் போய்விடுகிறது. நான் இறையாட்சிப் பணியில் தீவிரமாக இறங்கிய போது அது ஆபத்தான பணி என அறிந்தும் அதிலிருந்து என் அம்மா ஒருபோதும் என்னை தடுத்ததில்லை. என்னை உற்சாகப்படுத்தினார்.

என் அன்னையைப்போல எத்தனை தாய்மார்கள் இருக்கின்றார்கள்? குடும்பத்தையும் பிள்ளைகளையும் கவனிப்பதில் காட்டும் அக்கறையை விட தொலைக்காட்சி தொடர்கதைகளை தவறாமல் பார்கின்றீர்கள். உங்கள் செயல்களால் குழந்தைகளை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் மாற்றம் குடும்பத்திற்கு மிக முக்கியமானது.

**எனது பதில் :**

உன்னத உறவான அம்மா என்றும் பொறுப்பை ஏற்றிருக்கும் நான் அதை உணர்கின்றேன். சிற்றின்பங்களை துறந்துவிட்டு குழந்தைககளின் வாழ்வுக்கு துணை நிற்பேன். அதற்கு உமது அன்னையின் ஊக்கமும் உற்சாகமும் எனக்கு நிறைவாக கிடைக்கட்டும்.

## 5. எனக்கு உதவி செய்ய முன் வருகிறார் சீமோன்

என்னிடம் உதவி நாடி வந்தவர்கள் ஏராளம். ஆனால் எனக்கோ இப்போது உதவி தேவைப்படுகிறது. யாராவது வந்து கொஞ்ச நேரம் சிலுவையை பிடித்துக் கொள்ள மாட்டார்களா? என ஏங்கிய போது, சீமோன் வந்து சிலுவையை வாங்கிக் கொள்கிறார். இந்த உலகிற்கு சீமோனைப் போன்றவர்கள் தேவைப்படுகின்றார்கள். இவ்வுலகில் சுமைகள் அதிகம், சுமைதாங்கிகள் அதிகம் தேவைப்படுகிறார்கள்.

உதவுகின்ற எண்ணம் உள்ளத்தில் உற்றெடுக்க வேண்டும். எதையும் எதிர்பார்த்து உதவாதே. எதையும் வசூலித்துக் கொண்டு உதவாதே. இதயமே இல்லாத மனிதனைப் போல் இராதே. சீமோனைப் போல் உங்கள் கைகளை பிறருக்கு நீட்டு. அடுத்தவர்களின் உடமைகளை பிடுங்குவதற்கு நீட்டாதே.

**எனது பதில் :**








எனக்கு நீர் தந்த கரங்கள் உதவுவதற்கே என்பதை மறந்து அடுத்தவருக்கு அக்கிரமங்கள் செய்துவிட்டேன். இனிமேல் அடுத்தவர்களின் தேவையை பாராமுகமாய் இராது. எதையும் எதிர்பாராமல் ஓடிப்போய் உதவுவேன். சீமோனைப் போல நானும் மாறுவேன்.

## 6. எனது முகத்தை துணிச்சலுடன் துடைகிறாள் வெரோணிக்கா

நான் முகங்களைப் பார்ப்பதைவிட முகமூடிகளைத்-தான் அதிகம் பார்த்திருக்கிறேன். எனது முகத்தைபார், உனது தீச்செயல்கள், இரத்த வியர்வையால் என் முகத்தை

ஆக்கிரமித்துக் கொண்டன.
யோடு வந்து துடைக்கிறாள்
அறிமுகமானவர் அல்ல. ஆ

இன்னும் எத்தனை
இருக்கின்றார்கள். இரக்கப்ப
கூட்டம் கூடி கடைந்தெடுத்த
அவர்களைப் பற்றி எப்படி எ
அன்பான பெண்களை அவது

அலங்கோலமாக இருக்கிற என் முகத்தை அக்கறை- வெரோணிக்கா எனும் இந்த இளம்பெண். எனக்கு இவர் னால் என்மீது இரக்கப்பட்டு இந்த செயலை செய்கிறார்.

இளம் பெண்கள் இரக்கம் குணம் கொண்டவர்கள் ணி செய்தால் ஆலயங்களிலும், பொதுநலப்பணிகளிலும் கழிவு கதைகளால் விமர்சனம் செய்பவர்கள் எத்தனை பேர்? ல்லாம் பேசுகிறாய். அவர்களின் நற்பெயரை கெடுக்கிறாய். றாகப் பேசுவதை எப்போது நிறுத்தப் போகிறாய்

**எனது பதில் :**

இயேசுவே வெரோணிக்காவைப் போன்று துணிச்சல் மிக்க பெண்கள் சமூக ஈடுபாடு கொண்டு செயல்படும்போது அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவர்களை களங்கப்படுத்தியிருக்கிறேன். அருவருப்பானவற்றை பேசி இருக்கிறேன். இனிமேல் அப்படியான செயல்களில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குப் பண்ணுகிறேன்.

## 7. இரண்டாம் முறையாக நான் தரையில் விழுகிறேன்.

நான் இப்போது விழுந்ததற்கு யாரையும் குற்றம் சொல்ல விரும்பவில்லை. பயணத்தில் விழுவதும் எழுவதும் சகஜம். உனது பயணத்தில் எத்தனையோ முறை விழுந்திருக்கிறாய், எத்தனையோ முறை சிகரங்களைத் தொட்டு வெற்றிக் கண்டிருக்கிறாய். இதற்கெல்லாம் கடின உழைப்புதான் காரணம் என்று பெருமை பேசிக் கொண்டாய். ஆனால் நீ தடுக்கி விழுந்து தோல்வியை தழுவிய போது பிறர் தான் இதற்கு காரணம் என்று குறை கூறுகிறாய். இந்த தீய குணத்தை நீ என்றாவது யோசித்து இருக்கிறாயா? நீ விழுவதற்கெல்லாம் அடுத்தவரை காரணம் சொல்லாதே. உன் தவறுக்கெல்லாம் அடுத்தவர் மீது பழி போடாதே.

**எனது பதில் :**

அடுத்தவர் மீது பழிபோட்டே பழகிவிட்டேன். வெற்றியை கொண்டாடும் நான் தோல்வியை ஏற்றுக்கொள்-ளவும் பழகிக் கொள்கிறேன். விழுந்த இடத்தில் பழிபோட்டுக் கொண்டிருக்காமல் எழுந்து நடந்திட ஆரோக்கியமாக சிந்திப்பேன்.

## 8. எனக்காக கண்ணீர் வடிக்கிறார்கள் எருசலேம் பெண்கள்.

பெண்கள் இயல்பாகவே இரக்கமுடையவர்கள் பிறருக்கு உதவுகிற உயர்ந்த உள்ளம் கொண்டவர்கள் எனது சிலுவைத் தண்டனையைக் குறித்து அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லையே என்கிற கவலையிலும், இந்த சூழலிலும் எனக்கு எந்த வழியிலாவது உதவ வேண்டும் என்கிற ஆதங்கத்திலும் எருசலேம் நகரத்துப் பெண்கள் அழுகிறார்கள். அழுது என்ன ஆகப்போகிறது? எனக்காக அழாதீர்கள். உங்கள் வாழ்வை மேன்மைப்-படுத்திக் கொள்ள, உங்கள் குடும்பத்தை நல்வழிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளுங்கள். அழுகை உங்களை பலவீனப்படுத்தும், பிரச்சினைகளை மன உறுதியுடன் மேற்கொள்ளுங்கள்.

**எனது பதில் :**

அக்கிரமங்களை காணும்போது எனது இயலாமையை நினைத்து அழுதுவிடுகின்றேன். இனி பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது அழுவதை நிறுத்தி-விட்டு, அறிவின் துணிவோடு தீர்வு காண கண்டிப்பாக முயலுவேன்.

## 9. மூன்றாம் முறையாக இதோ விழுந்துவிட்டேன்.

விழவேண்டும் என்பது என் விருப்பமல்ல, தவிர்க்க முடியாமல் தரையில் மீண்டும் விழுந்துவிட்டேன். ஒருமுறை விழுகிறபோது அடுத்தமுறை விழுந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கையாக இருந்தாலும், விழுவதை தடுக்க முடிவதில்லை. வாழ்க்கையில் இதுபோல எத்தனையோ வீழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் விழுந்து எழுவதுதான் வாழ்க்கை.

நீயோ தோல்வியே கூடாது என்று நினைக்கிறாய். சிறுதோல்வி வந்தாலும் நீ உடைந்து போகிறாய். வெற்றி என்னும் உச்சியில் ஏற தோல்விகள் என்கிற சறுக்கல்களை சமாளிக்க வேண்டும்.

**எனது பதில் :**

வாழ்க்கையை சொகுசாக எடுத்துக்கொண்டு சிறு சோதனைகளிலும் சோர்ந்து போய் விடுகிறேன். இனி தோல்விகளைக் கண்டு சோர்ந்து விடாமல் முயற்சியை மூலதனமாகக் கொண்டு முன்னுக்கு வருவேன்.

# சிலுவைப்பாதை

# இயேசுவின் குரலோசை



## 10. எனது ஆடைகளைப் பறித்து அவமானப்படுத்துகிறார்கள்.

என் உடல் வலியோடு மனவலியையும் அதிகப்-படுத்தினால்தான் தங்களின் மகிழ்ச்சி அதிகரிக்கும் என நினைத்தவர்கள் எனது ஆடைகளை வலுகட்டாயமாக பிடுங்கிக் கொண்டு அதனால் எனக்கு ஏற்படும் அவமான-த்தில் அகமகிழ்ந்த துடிக்கின்றனர். இது அத்துமீறிய மனித உரிமை மீறல், மனித மாண்பை சிதைக்கும் மலிவான செயல். இந்த இழிச்செயலை நீ இன்னமும் தொடர்ந்துக் கொண்டிருக்கிறாய் என்பதே என் மனவேதனை.

நட்புடன் உறவாடி அவர்களிடம் பெற்றுக்கொண்ட இரகசியத்தை, பிணக்கு ஏற்படும் போது உடைத்து விடுவது, அவர்களின் ஆடையை உரிவது போன்றது தான். முகவரி இல்லாத மொட்டைக் கடிதம் எழுதுவது, அவதூறுகளை பரப்புவது, வீதிகளில் இருந்து பேசுவது, வெட்கக்கேடான இழிச் செயல்களை நீ எப்போது நிறுத்துவாய்.

**எனது பதில் :**

அடுத்தவருக்கு அவமானத்தை ஏற்படுத்தி மகிழ்ந்திருக்கிறேன். இப்போதுதான் உணர்கிறேன் இது எவ்வளவு கொடிய பாவம் என்பதை நான் இனி ஒருபோதும், இத்தகைய இழிச் செயல்களில் இறங்கமாட்டேன்.

## 11. என் கைகளையும் கால்களையும் சிலுவையில் அறைகின்றனர்.

வன்முறை வாழ்க்கைக்கு ஆகாது. பலபேருக்கு நன்மை செய்ய நீண்ட எனது கைகள், ஊரெங்கும் நடந்து சென்ற எனது கால்கள், இப்போது கொடிய ஆணிகளுக்கு இரையாகின்றன. கொலைவெறி கொண்டவர்கள். கொடூரமாய் அரைக்கின்றனர். வேதனையை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கதறுகிறேன். அவர்களே கண்டுக்கொள்ளவில்லை. இன்று வன்முறைக்கு இரையாகிறவர்கள். கதறும் ஒலி என் காதில் விழுகிறது. அப்பாவிகளை அநியாயமாய் அடித்து துன்புறுத்துகிறாய். வன்முறை நீ வாழும் வீடுகளிலும் உண்டு. நீ வாழும் சமுதாயத்திலும் உண்டு. வன்முறை வாழ்க்கை உனக்கு அழிவைத் தான் கொண்டுவரும். எப்போது உன் வன்முறை செயல்களில் இருந்து விடுதலையடையப் போகிறாய்.

**எனது பதில் :**

வாழ்க்கையில் வன்முறையை விரும்பாத இயேசுவே! பிறரை எனது சொற்களாலும், செயல்களாலும் தாக்குகிறபோது உம்மை சிலுவையில் அறைகிற ஆணியாகிவிடுகிறேன். பிறரை தாக்குவது பாவம் என அறிந்துகொண்டேன். எந்தப் பிறரையே, சகோதர சகோதரிகளையோ தாக்க மாட்டேன்.

## 12. உனக்காக என் உயிரைக் கையளிக்கிறேன்.

நீ வாழ்வு பெறத்தான் நான் இந்த உலகிற்கு வந்தேன். உனது மீட்புக்காகவே நான் நிறைந்த மனத்துடன் உன் உயிரை உனக்காக தருகின்றேன். நண்பர்களுக்காக உயிரைத் தருவதை விட உயர்ந்த அன்பு இல்லை என்று நான் கூறியது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? உன்னை என் நண்பனாகவே நினைக்கிறேன். அதற்காகவே என் உயிரைத் தருகிறேன். உனக்காக என்னை தருவதில் எனக்கு மகிழ்ச்சியே.

உயிரைத் தந்த எனக்கு நீ என்ன தரப்போகிறாய். உன்னிடம் ஒன்று கேட்கிறேன் எனது மரணம் உனக்காக, உன் மரணம் யாருக்காக? நீ உயிரைத் தரவேண்டாம். கொரோனா தொற்றுநோயினால் பாதித்து அவதியுறும் உன் மக்களுக்காக, உன்னைக்கொடு, பணம் இல்லாமல், உணவு இல்லாமல் அவதியுறும் நபர்களைத் தேடி செல்லு. அவர்களின் நலம் விசாரி. என் பணிகளை நீ தொடர்ந்திடு. இனி யாருக்கும் சிலுவையை கொடுக்காதே.

**எனது பதில் :**

இனி உமக்காக வாழ துடிக்கிறேன். இயேசுவே என்னில் நீ வாழ்கிறீர் என்பதை உணருகிறேன். பிறருக்காக என்னையே கொடுக்க துணிந்துவிட்டேன். உறவுகளை உருவாக்கவே ஆசைப்படுகிறேன்.

## 13. எனது உடலை சுமக்கும் என் அன்னை

நிபந்தனையே இல்லாமல் நேசிக்கும் நெஞ்சம் அம்மாவுக்கு மட்டுமே உண்டு. இறுதிவரை நிழலாகத் தொடருகின்ற கருணை வடிவம் அம்மாதான். என் இறுதிப் பயணத்தில் எனக்குத் துணையிருக்கும் என் அம்மாவை நினைத்து பெருமைப்படுகிறேன். உலகில் ஒருபோதும் ஒதுங்கிப் போகாத ஒதுக்கப்படாத உறவு அம்மா உறவுதான். என் அம்மா என்னை நேசிப்பது மட்டுமல்ல என் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டவள்.

அன்பில் சதை வடிவமான அம்மாவை வயதான காலத்தில் நீ விரட்டி அடிக்கிறாயே, அம்மாவை மதிக்-காமல், அன்பு செய்யாமல், ஆதரவு அளிக்காமல், பாதுகாக்காமல், நீ எத்தனை முறை ஆலயங்களுக்குச் சென்றாலும் அதில் பயனில்லை.

**எனது பதில் :**

அன்னை மரியை எப்போதும் நேசிக்கும் இயேசுவே, என் அம்மாவை நேசிக்க வரம் தாரும். வயோதிப காலத்தில் வருத்தப்படுத்தி விட்டேன். இந்த செயலுக்காக வருந்துகிறேன். இனிமேல் என் அம்மாவை நேசித்து மதித்து வாழ்வேன்.

## 14. என் உடலை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

என் உடலை இன்னொருவரின் இரவல் கல்லறை-யில் அடக்கம் செய்தார்கள். கல்லறை நிரந்தரமானது அல்ல, என்பதாலே சொந்தக் கல்லறையைப் பற்றி நான் நினைக்கவில்லை. மனிதனுக்கு கல்லறை அவசியமில்லை. ஆன்மாவை தற்காலிகமாக சுமந்து நிற்கிறது உடல். அது மண்ணோடு மக்கிப்போகும். ஆன்மா புதுவாழ்வுக்கு உயிர்கொண்டு எழும்.

நீ உலகத்தைப் பற்றி அதிகம் கவலைக்-கொள்ளாதே உன் மறுவாழ்வைப் பற்றி எண்ணு. இந்த உலகம் உனக்கு நிரந்தரம் என நினைத்து ஏமாறாதே. நொடிப்பொழுதில் இந்த நீர்மேல் குமிழி உடைந்துபோகும். கனவு காணாதே.

**எனது பதில் :**

நிலையான வாழ்வு நானே என வாக்களித்த இயேசுவே, எனது எண்ணம் முழுவதும் இந்த உலகத்தைச் சுற்றியே இருந்துவிட்டது. இனி நிலை வாழ்வுக்கான முயற்சியில் ஈடுபடுவேன், உமது குரலோசை என் காதில் விழுந்து இதயத்திலே பதிந்துவிட்டது. இனி என் பாதையும் பயணமும் தெளிவாயிற்று.

# ஒப்புரவு... மறைக் கல்வி அறிவோம்

அருட்சாதனங்கள்



13. **அற்ப பாவத்திற்கான தண்டனை என்ன?**

- இந்த உலகிலோ, உத்தரிக்கிற ஸ்தலத்திலோ தற்காலிக தண்டனையே இதற்குக் கிடைக்கும்.

14. **கடமையில் தவறுதல் எனப்படும் பாவம் என்ன?**

- தம்மால் செய்யக்கூடிய ஒன்றை ஒருவர் செய்யாதிருப்பது கடமையில் தவறுவதாகும்.

15. **எத் தீமையை அடிப்படையாகக் கொண்டு பாவம் வெளிப்படுகின்றது?**

- தலையாயப் பாவத்தைக் கொண்டு அது வெளிப்படுகின்றது.

16. **தலையாய பாவங்கள் எத்தனை உள்ளன?**

- ஏழு உள்ளன அவையாவன;

1. அகங்காரம், 2. பேராசை 3. காம இச்சை
4. குரோதம் 5. போசனைப் பிரியம்
6. பொறாமை 7. சோம்பல்


17. **இவற்றை தலையாய பாவம் என அழைப்பது ஏன்?**

- இவற்றை முன்வைத்தே அநேக பாவங்கள் விளைகின்றன.

18. **தலையாய பாவத்தை இல்லாதொழிக்கும் நற்குணங்கள் யாவை?**

- 1. தாழ்ச்சி, 2. தியாகம், 3. கற்பு, 4. அமைதி, 5. மிதமாயிருத்தல், 6. அன்பு, 7. சுறுசுறுப்பு.

# சிறுவர் ஒலி



## வேதாகமம் வாசிப்போம்





01. லூக்கா எந்நகரைச் சார்ந்தவர்?
02. லூக்காவிற்கு தெரிந்த தொழில் எது?
03. இவர் யாருடன் சேர்ந்து நற்செய்தி பணி செய்தார்?
04. பிற இனக் கிறிஸ்தவ சபைகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் யார்?
05. இந்நூல் யாருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது?
06. இந்நூல் எந்த மொழி நடையில் அமைந்துள்ளது?
07. இந்நூல் ஆசிரியரின் நோக்கமென்ன?
08. பிற இனத்தவருக்கென்று எழுதுவதால் இதில் எது தவிர்க்கப்படுகிறது?
09. எருசலேம் நகரம் யாரால் அழிக்கப்பட்டது?
10. இந்நூல் எழுதப்பட்ட காலம் எது?


15ம் பக்கம் விடைகள்

**ஞான ஒளி**
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
கொழும்பு 08.
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com

**பங்குனி 02ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள ஞான ஒளி முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களுடன் எமக்கு அனுப்பவும்.

**மித்வா தரம் 02 பிரிஜட் கல்லூரி**





*வேதாகமம் வாசிப்போம் என்ற பகுதிக்கு சரியான விடையை எழுதி அனுப்பிய* **செல்வி. எம். தர்ஷிக்கு** எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பரிசுத்த வேதாகமத்திலிருந்து சிறுவர்களுக்காக!



**நற்செய்தி மத் 20:33-43**

**அன்புக் குழந்தைகளே!**

தவக்காலத்தில் பயணம் செய்யும் நாம் மத்தேயு நற்செய்தியில் கொடிய குத்தகைக்காரர்கள் உவமையைப் பற்றி பார்ப்போம். இந்த உவமையில் திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளர், தம் தோட்டத்தை தொழிலாளர்களிடம் ஒப்படைத்து விட்டு நெடும் பயணம் மேற்கொள்கிறார். பழம் பறிக்கும் காலம் நெருங்கி வந்தபோது பணியாளர்களை அனுப்பி, தனக்கு சேர வேண்டிய குத்தகைக்கு உரிய பணத்தை வசூலித்து வரும்படி கேட்டுக்கொள்கிறார். ஆனால் அவர்களோ அவர்களை மதிக்காமல் அடிக்கிறார்கள், உதைக்கிறார்கள், கொலையும் செய்கிறார்கள். இறுதியில் தம் மகனையே அனுப்புகிறார். அவருக்கும் அதே நிலைமை தான். உவமையின் இறுதியில், அந்த உரிமையாளர் என்ன செய்வார் என்று கேள்வி கேட்கிறார். அதற்கு, அவர்களை ஒழித்து, தனக்குரிய குத்தகையை முறையாக செலுத்தக் கூடியவர்களிடம் ஒப்படைப்பார் என்று பதில் வருகிறது.

சரி.... இதனை நாம் எப்படி புரிந்து கொள்வது, நம்மைப் பொருத்தவரை, நமக்குத் திராட்சைத் தோட்டம் என்பது இந்த உலகம்தான். இந்த உலகம், அதில் வாழும் அனைத்தையும் படைத்தவர் நம் கடவுள். அவர்தான் அதன் சொந்தக்காரர். இந்த உலகில் வாழுகிற அனைவரும் ஒருவர் மற்றவரை அன்புச் செய்யவே கடமைப்பட்டிருக்கிறோம். நம்மில் உள்ள வேறுபாடுகளை மறந்து, ஒருவர் மற்றவரை சகோதர சகோதரிகளாக பாவிக்க வேண்டும். அந்தத் திராட்சைத் தோட்டத்திற்கு வரும் உரிமையாளரின் பணியாளர்கள் யார், என்றால் நம்மோடு வாழும் சக மனிதர்கள். நாம் அவர்களை ஏற்று அன்புச் செய்ய வேண்டும். அதிகாரம் செலுத்தக் கூடாது. உவமையில் விளக்கப்பட்டதுபோல நையப்புடைப்பதும், உதைப்பதும், கல்லால் அடிப்பதும் தவறுதானே. நாம் அனைவருமே உலகில் நிரந்தரமானவர்கள் அல்ல. இந்த உலகைக் கடந்து போகும் பயணிகள் நாம். ஆகையால், இத்தவக்காலத்தில் இறைவன் கொடுத்த மிகப்பெரிய கொடையான இந்த வாழ்க்கையை நாம் அர்த்தமுள்ள விதத்தில் வாழ்ந்திட வேண்டும். மதத்தால், சாதியால், மொழியால், இனத்தால் ஒருவர் மற்றவரை பிரித்துப் பார்க்கக்கூடாது. நம்மிடையே ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது. எல்லாருடைய உடம்பிலும் ஓடும் இரத்தம் சிகப்புதான் என்பதை அறிந்திருக்க வேண்டும். கடவுள் கொடுத்த இந்த வாழ்க்கையை நாம் சிறப்பாக வாழ்ந்து, இந்த உலகை, அதன் சுற்றுச் சூழலைப் பாதிப்படையாமல் பாதுகாத்து வரும் சந்ததிக்கு விட்டுச்செல்ல வேண்டும் சரியா?

## நிறம் தீட்டுக





## வேதாகம வசனங்கள் சில....

**அஞ்சாதே உனக்குத் துணையாய் இருப்பேன்....** (எசா 41:13)

**பிள்ளைகளே, நீங்கள் கடவுளைச் சார்ந்தவர்கள். நீங்கள் அந்தப் போலி இறைவாக்கினர்களை வென்று விட்டீர்கள்ளூ உங்களுள் இருப்பவர் உலகில் இருக்கும் அந்த எதிர்க்கிறிஸ்துவை விடப் பெரியவர்"** (1யோவா4:4)

**தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்** (புனித மத். 10:38)

**பொழுது புலர்ந்து விடிவெள்ளி உங்கள் இதயங்களில் தோன்றும்வரை அது இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கைப் போன்றது.** (2பேது 1:19)

**உன்னைத் தாக்குமாறு உருவாக்கப்பட்ட எந்தப் போர்க்கருவியும் நிலைத்திராது.** (எசா 54:17)

**எம். தருஷி**
**மொணராகலை விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலம். தரம் 8**

## மாணவர் ஒளி



# நீ எனக்குரியவன்

### உன்னோடு ஒரு நிமிடம்

நீயே! எனது உலகின் உப்பாகவும், ஒளியாகவும் வாழ்கின்றாய்.

நீ தான் என் உலகத்தின் உப்பாய் இருக்கின்றாய். உவர்ப்புள்ள உப்பாய் இருக்கின்றாய்.

நீ தான் என் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றாய் உனது ஒளியை ஏற்றி மரக்காலுக்குள் வைக்க வேண்டாம். உனது ஒளியை ஏற்றி விளக்குத் தண்டின் மீது வை.

உன் இருள் சூழந்த வாழ்வில் நான் உன் ஒளியாய் இருப்பேன் உன் வழிப்பயணத்தில் நான் உன் வழிகாட்டியாய் இருப்பேன் நீ மனிதர்முன் ஒளிர்க!

நான் உன் விளக்கிற்கு ஒளியேற்றுவேன். நான் உன் இருளை ஒளிமயமாக்குவேன். இருளை நீக்கும் ஒளியாகவும் வழிகாட்டும் ஒளியாகவும் என்றும் நீ இருப்பாய்

நீ என் கண்ணுக்கு மிக விலையேறப் பெற்றவன் நீ எனக்குச் சொந்தம் நான் உன்னை மிகவும் அன்பு செய்கின்றேன் நீ என்னை அன்பு செய்வதுபோல நானும் உன்னை அன்பு செய்கின்றேன்.

இப்பொழுது நாம் ஒவ்வொருவரில் இருக்கின்றோம். நீ என்னிலும் நான் உன்னிலும் இருக்கின்றோம். நீயும் நானும் இணைந்து புதிய உலகை உருவாக்குவோம்!

புதிய உலகைக் கட்டி எழுப்புவோம். நாம் இருவரும் சேர்ந்து வெற்றிக்கொடி நாட்டுவோம். திட்டங்களை நிறைவேற்றுவோம். உறுதியாய் நிற்போம். மகிழ்ச்சியில் ஆர்ப்பரிப்போம்.

**நன்றி இறைவா நன்றி**

ஆண்டவரே! என்னோடு இன்று நீர் பேசினீர். உருக்குலைந்து கிடந்த என்னை ஒன்று சேர்த்திருக்கின்றீர்.

மகிழ்வுறும் செய்திகளை நீர் என்னோடு பகிர்ந்து கொண்டீர். நன்றி இறைவா!

என் மதிப்பை உணரச் செய்தீர். என் வலிமையை மீட்டுத் தந்தீர். மன இறுக்கங்களைத் தகர்க்கச் செய்தீர்.

துர்க்கனவினால் நிரம்பிய என் உறக்கத்தை விடியல்களினால் எழுப்பினீர்.

உலகின் எல்லா திசைகளிலும் வெறுப்பும் அவமதிப்பும் வந்தபோது நீரே என்னை உம் கரங்களில் தாங்கிக் கொண்டீர்.

நான் பட்டினியாகக் கிடந்தபோது நீரே பசும்புல்லின் மேய்ச்சலைக் காட்டினீர். சோர்வில் துவண்டு விழுந்தபோது குளிர் தரும் தருவாக நீரே என் களைப்பை ஆற்றினீர்.

வாழ்வின் பாலையைக் கடக்க நேருகையில் அமைதியான தடாகத்தில் அருந்த வைத்தீர். எனக்குப் புத்துயிர் அளிப்பவரும் நீரே என்னை நேரிய வழியில் நடப்பிப்பவரும் நீரே

இருள் சூழ்ந்த வெளிகளில் நடக்க நேரிடுகையில் பௌர்ணமியானீர். துன்ப காலங்களில் எனக்கு துணையாய் நின்றீர்.

வறண்ட என் பாத்திரங்களை ஆசீரால் நிரப்புகிறவரும் நீரே.

என் வக்கிரங்களையும் கொடூரங்களையும் நீக்கி என்னை அமைதிக்குத் தூது அனுப்பினீர்.

ஆண்டவரே! நீர் நல்லவர். ஆகவேதான் நன்மையான நான் உருவானேன்.

ஆண்டவரே, நீர் நேர்மையுள்ளவர். ஆகவேதான் பாதிக்கப்படுகின்ற பொழுதெல்லாம் உன்னிடமே வழக்காடுகின்றேன்.

ஆண்டவரே நீர் அன்புடையவர். என் வெறுப்புக்களை உம்மிலே இணைந்து களைந்துக் கொள்கிறேன். ஆண்டவரே நீரே என் ஆற்றல். அதனால் என் புகழ் வலிமையடைகிறது. நீரே என் அடைக்கலம் எல்லோரையும் வரவேற்க திறந்திருக்கிறது என் இல்லம்.

நீரே என் அரண் என் எதிரிகளின் சூழ்ச்சிகளில் என் முன்பாக இருப்பீர். நீரே என் புகலிடம் ஓர் அகதியாய்ச் சுற்றித் திரிந்த சமயம் எனக்கு இடம் கொடுத்தீர். நீரே என் வாழ்வின் அணையாத தீபம். நீரே நான் இறுதிவரை பற்றிக்கொள்ளும் உரிமைச் சொத்து நன்றியால் உம்மிடம் பேசுகின்றேன். அது பாடலைப் போலவே இனிக்கிறது.

ஒரு மழலைபோல் நடந்து வருகின்றேன். பின்பாகத்தான் தெரிகிறது அணைபோல உம் கரங்களே என்னைத் தாங்கி வந்துள்ளன.

ஒரு தாயைப் போல் என் இன்பத்திலும் என் துன்பத்திலும் என் கூடவே இருந்தீர்.

சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கிலிருந்து நீரே என்னை கைதூக்கி எழுப்பிவிட்டீர்.

நன்றி ஆண்டவரே புயலின் மத்தியில் வளைந்து கொள்ளும் நாணலைப் போல் தாழ்ச்சி தந்தீர்

அவமானங்களின் சூழ்ச்சிகளில் உம் அன்பால் உறுதிப்படுத்தினீர். நீர் எனக்குச் செய்தது எல்லாமே நலமாகவே இருந்தன.

எனது உள்ளத்து விருப்பங்களையும் நீரே நிறைவேற்றினீர்.

வாழ்வின் வழியையும் சாவின் இருளையும் உம்மிடமே ஒப்படைத்தேன் நீரே கைப்பிடித்து வழிநடத்தினீர்.

என் இளமையில் என் அழகாயிருந்தீர். என் முதுமையில் எனக்கு ஞானமானீர். என் இறப்பினில் நித்திய ஒளியானீர் என்றென்றைக்குமே எமக்குள் அன்பானீர்.

நன்றி ஆண்டவரே என்னை நானாகவே படைத்ததற்கு!

**முற்றும்.**

# ஆண்டவரின் வாய் உரைத்த உண்மை

**மண்ணில் விளைந்த**
**மனிதா**
**உன்னில் உள்ளது**
**என்ன?**
**பாவம் செய்ய துணிகிறாய்**
**பரிகாரம் தேட**
**தயங்குகிறாய்**
**மண்ணில் மண்ணாய்**
**போகுமுன்னே**
**மனதில் தேவனை**
**நினைப்பாயா?**

**நோன்பு என்று**
**சொல்லிக்கொண்டு**
**உன்னை நீயே**
**ஒடுக்கிக்கொண்டு**
**உண்ணாதிருந்து சாக்கு**
**உடுத்தி**
**உன் சுய ஆதாயம்**
**தேடிக்கொண்டு**
**காண்போர் புகழ**
**நடிப்பதையா**
**நான் நல்ல நோன்பு**
**என்பேன்?**

**என் சாயல்**
**உனக்குத் தந்தேன்**
**வன்செயல் மறக்கச்**
**சொன்னேன்,**
**கண் திறந்து**
**பார்க்கும் போதே**
**கற்றறிந்து உணரச்**
**சொன்னேன்**
**புண்பட்டோர்**
**வேதனைத் தாங்கி**
**உன் உடமை பகிரச்**
**சொன்னேன்!**

**சிறைப்பட்டோர்**
**விடுதலை அடைய**
**சிரமத்தை ஏற்க**
**சொன்னேன்,**
**கறைபடிந்த மனிதர்**
**மேலும்**
**உரையாடி மகிழ**
**சொன்னேன்**
**குறையோடு வாழ்வோர்**
**மேலும்**
**கருணையோடு**
**இணையச் சொன்னேன்!**

**பசியோடு வாடும் மக்கள்**
**புசிக்கத் தந்து மகிழ**
**சொன்னேன்**
**தங்க இடமில்லா**
**வறியோரை**
**உன் இல்லம்**
**அழைக்கச் சொன்னேன்,**
**உடையின்றி இருப்போர்**
**உடலை,**
**உன் உடை தந்து**
**மூடச்சொன்னேன்!**



**சுயநலம் மறக்க**
**சொன்னேன்,**
**சொந்தங்களை**
**அணைக்கச்**
**சொன்னேன்**
**பயனற்ற ஆசையை**
**அடக்கச்சொன்னேன்**
**பொருளாசையின்றி வாழ**
**சொன்னேன்**
**கயவர்கள் நட்பினை**
**விலக்க சொன்னேன்**
**கள்வர்கள் உறவினை**
**அகற்றச் சொன்னேன்!**

**என் வாய் சொன்ன**
**கட்டளைகள்**
**உன் வாழ்வில்**
**நிலைக்கக் கண்டால்,**
**உன்துன்ப நாளில்**
**என்னை**
**அன்போடு**
**அழைக்கும்போது,**
**என் மகனே இதோ**
**இருக்கிறேன்**
**என்று சொல்லி**
**அணைத்திடுவேன்!**

**நோன்பு என்பது**
**வினைத்தீர்க்கும்,**
**உபவாசம் என்பது**
**உறுதிதரும்,**
**நான் விரும்பும்**
**நோன்பினை**
**நன்றாக**
**சொல்லிவிட்டேன்,**
**என் அன்பில் நிலைத்து**
**வாழ நீ**
**உன் நோன்பை**
**மாற்றிக்கொள்!**

❖❖❖❖




**என் தேவனே!**
**நான் உன்னில் வாழும் பசியை**
**நான் உன்னைப்போல் வாழும் பசியை**
**நான் உனக்காய் வாழும் பசியை**
**தயவாய் தந்தருள வேண்டுகிறேன்!.**

G. ரொபின்சன்,
புனித சூசையப்பர் குருமடம்,
பூரணவத்த, கண்டி

# 20 ஆண்டுகளுக்குமுன், திருத்தந்தை பிரான்சிஸ் கர்தினாலாக இருந்தபோது...



20 ஆண்டுகளுக்குமுன், திருத்தந்தை புனித இரண்டாம்யோவான்பவுல் அவர்கள், அப்போதைய புவனஸ் அய்ரஸ் பேராயர் பெர்கோலியோ அவர்கள் உட்பட, 44 புதிய கர்தினால்களை அறிவித்தார்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புவனஸ் அய்ரஸ் பேராயராகப் பணியாற்றியபோது, 2001ம் ஆண்டு பிப்ரவரி 21ம் திகதி, திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்கள், கர்தினாலாக உயர்த்தப்பட்டதன் இருபதாம் ஆண்டு நிறைவு.

கர்தினால் பெர்கோலியோ அவர்கள், 2013ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் தேதி, அகில உலக கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணிக்கு, திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, பிரான்சிஸ் என்ற பெயரைத் தெரிவு செய்தார்.

கர்தினால் ஹோர்கே மாரியோ பெர்கோலியோ அவர்கள், தன் பணிக்காலத்தில் ஆற்றிய மறையுரைகள் மற்றும், உரைகளைப் பின்னோக்கிப் பார்க்கும்போது, அவ்வுரைகளில் பயன்படுத்தப்பட்ட சிந்தனைகள், கடந்த 8 ஆண்டுகளாக, அவரது தலைமைப் பணியில் முன்னுரிமை பெறுவதைக் காண முடிகின்றது.

**வரவேற்கும் ஓர் இதயம்!**

1969ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ம் தேதி, தனது பிறந்த நாளுக்கு, நான்கு நாள்களுக்குமுன், தனது 33வது வயதில் இயேசு சபையில் அருள் பணித்துவ வாழ்வுக்கு திருநிலைப்படுத்தப்பட்ட கர்தினால் பெர்கோலியோ அவர்கள், இரக்கம், திறந்த கதவுகள், பரிவிரக்கம் ஆகிய பாதைகளை, தன் அருள்பணியாளர்களுக்குச் சுட்டிக்காட்டி வந்தார்.

புனித பேதுருவின் வழிவருபவராக, திருஅவையின் தலைமைப்பணியை ஏற்றபோது, தான் ஆயர் பணிக்குத் தெரிவுசெய்த, **பரிவுகொண்டு மற்றும் தெரிவுசெய்து** (miserando atque eligendo) என்ற விருதுவாக்கையே தேர்ந்தெடுத்தார். மேலும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்மீகப் பயணத்தில், இரக்கமே சிறப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளது.


1953ம் ஆண்டு, புனித மத்தேயு திருநாளன்று, தனது 17வது வயதில் கடவுளின் அன்பு பிரசன்னத்தை சிறப்பாக உணர்ந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுளின் இரக்கம், தன்னை புனித லொயோலா இஞ்ஞாசியாரின் பாதையில் துறவு வாழ்வைத் தேர்ந்து கொள்வதற்கு அழைக்கின்றது என்று உணர்ந்தார். இவர், 1958ம் ஆண்டு, மார்ச் மாதம் 11ம் தேதி, இயேசு சபையில் நவதுறவியாகச் சேர்ந்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புவனஸ் அய்ரஸ் பேராயராகப் பணியாற்றியபோது, இலத்தீன் அமெரிக்காவில் முக்கிய நபராக, மக்களால் பெரிதும் அன்புகூரப்பட்டு, பேருந்துகள் மற்றும், உள்ளூர் இரயில்களில் பயணம் மேற்கொண்டார். இவர், கர்தினாலாக உயர்த்தப்படும் திருவழிபாட்டு நிகழ்வுக்கு உரோம் வந்தபோது, புதிய ஆடைகளைத் தயாரிக்காமல், 1998ம் ஆண்டில் இறைபதம் சேர்ந்த, அவருக்கு முன்னர் பணியாற்றிய, கர்தினால் Antonio Quarracino அவர்களது ஆடையையே தனது அளவுக்கு ஏற்ப மாற்றியமைத்தார்.

**கர்தினாலாக கடைசி மறையுரை**

புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் அவையில் கலந்து கொள்வதற்காக, 2013ம் ஆண்டில் உரோம் மாநகருக்குப் புறப்படுவதற்குமுன், அதே ஆண்டு மார்ச் 28ம் தேதி இடம் பெறவிருந்த, புனித வியாழன் எண்ணெய் மந்திரிப்பு திருப்பலிக்கென மறையுரையை தயார் செய்து வைத்திருந்தார். அந்த மறையுரை, சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு, திருஅவை மறைப்பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாக இருந்தது. திருத்தந்தை தலைமைப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில், 2013ம் ஆண்டு மார்ச் 13ம் தேதி, அவர் முதல் முறையாக மக்களை வாழ்த்தியபோது, நம் மத்தியில், அன்பு, உடன்பிறந்த உணர்வு, மற்றும், நம்பிக்கை ஆகிய பயணத்தின் பாதையை திருஅவை சுட்டிக்காட்டுகிறது என்று கூறினார்

## வத்திக்கானிலிருந்து.....




# மகிழ்வின் மந்திரம்:

மகிழ்வின் மந்திரம்: மாற்றுத்திறனாளிகளை ஏற்கும் குடும்பங்கள்

தனது தேவைகளுக்கு அடுத்தவரின் உதவியை நாடும், மாற்றுத்திறனாளி குழந்தையின் கஷ்டமான நிலையை அன்போடு ஏற்கும் குடும்பங்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவை. (அன்பின் மகிழ்வு 47)

பிப்ரவரி 28, ஞாயிறன்று, அரிதான நோய்கள் 16வது உலக நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இன்று உலகில், ஆறாயிரத்திற்கு மேற்பட்ட நோய்கள் அரிதானவை என்றும், இவற்றில் ஏறத்தாழ 72 விழுக்காடு, பரம்பரை நோய் என்றும், 70 விழுக்காடு குழந்தைப்பருவத்திலே தொடங்குகின்றது என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறன்று வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு வழங்கிய நண்பகல் மூவேளை செப உரைக்குப்பின், அரிதான நோய்கள் உலக நாள் பற்றிக் குறிப்பிட்டார். இந்நோய்கள் பற்றி மருத்துவ ஆய்வுகளையும், சிகிச்சைகளையும் மேற்கொள்ளும் அனைவருக்கும், திருத்தந்தை, தன் நன்றியைத் தெரிவித்தார். இந்நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள அனைவரோடும், குறிப்பாக, சிறார் மற்றும், அவர்களின் குடும்பங்களோடு தனது அருகாமையை



வெளிப்படுத்தினார். இந்நோய்களால் துன்புறும் அனைவரும் தனிமையை உணராதவண்ணம், முன்னெப்போதும் இருந்ததைவிட, இப்போது அவர்களுக்குத் தோழமையுணர்வு அதிகம் தேவைப்படுகின்றது என்றும் திருத்தந்தை கூறினார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் "அன்பின் மகிழ்வு" (Amoris Latitia) திருத்தூது அறிவுரை மடலின் இரண்டாவது பிரிவின் 47வது பந்தியிலும், சிறப்புக் கவனம் தேவைப்படும் பிள்ளைகளைக் கொண்டிருக்கும் குடும்பங்கள் பற்றிய தன் கருத்துக்களையே பதிவுசெய்துள்ளார்.

உலக மாமன்றத் தந்தையர், சிறப்புக் கவனம் தேவைப்படும் ஆள்களைக் கொண்டிருக்கும் குடும்பங்கள் மீது குறிப்பிட்ட அக்கறை காட்டப்படவேண்டும் என்று அழைப்பு விடுத்தனர். குடும்பத்தில், மாற்றுத்திறன் கொண்டவர்களின் நடத்தைகள் முன்வைக்கும் எதிர்பாராத சவால், அதன் சமநிலை, விருப்பங்கள், மற்றும், எதிர்பார்ப்புக்களை நிலைகுலையச் செய்யக்கூடும். தனது தேவைகளுக்கு அடுத்தவரின் உதவியை நாடும், மாற்றுத்திறனாளி குழந்தையின் கஷ்டமான நிலையை அன்போடு ஏற்கும் குடும்பங்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவை. இக்குடும்பங்கள், வாழ்வு எனும் கொடைக்கு, திருஅவை, மற்றும், சமுதாயத்திற்கு, பிரமாணிக்கத்துடன் பகரும் சான்று, விலைமதிப்பற்றது. இத்தகைய சூழல்களில், குடும்பம், கிறிஸ்தவ குழுமத்தோடு இணைந்து, மனித வாழ்வின் பலவீனமான புதிர்நிலையை வரவேற்று, பராமரிப்பதற்கு, புதிய அணுகுமுறைகள், புதிய வழிகளில் செயல்படுதல், வித்தியாசமான புரிந்துணர்வு, மற்றும், மற்றவரோடு அடையாளப்படுத்தும் வழிகளைக் கண்டுகொள்ளலாம். மாற்றுத்திறன்களோடு உள்ள மக்கள், தங்கள் குடும்பங்களுக்கு ஒரு கொடையாகவும், அன்பு, ஒருவர் ஒருவருக்கு உதவுதல், ஒன்றிப்பு ஆகியவற்றில் வளர்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் உள்ளனர். குடும்பம், நம்பிக்கையின் ஒளியில், சிறப்புக் கவனம் தேவைப்படும் மக்களின் இருப்பை ஏற்றால், அவர்கள், மனித வாழ்வின் மதிப்பையும், தன்மையையும், அதன் தகுதியான தேவைகள், உரிமைகள், மற்றும், வாய்ப்புக்களோடு ஏற்பார்கள், மற்றும், உறுதி செய்வார்கள். இத்தகைய அணுகுமுறை, மாற்றுத்திறனாளிகள் சார்பாக, இடம்பெறும் பராமரிப்பு மற்றும், பணிகளை மேம்படுத்தும். மேலும், அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், மக்கள் அவர்களுக்கு நெருக்கமாக இருந்து, பாசத்தைப் பொழிய ஊக்கப்படுத்தும். புலம்பெயர்ந்தோர் மற்றும், மாற்றுத்திறனாளிகள் மீது காட்டப்படும் அக்கறை, மற்றும், அர்ப்பணம், தூய ஆவியாரின் அடையாளமாக இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன் என்று திருத்தந்தை கூறியுள்ளார். இந்த இரு சூழல்களுமே, நாம் மற்றவரை வரவேற்பதிலும், நலிந்தோரை நம் குழுமங்களின் ஓர் அங்கமாக முழுமையாக ஏற்று உதவுவதிலும் இரக்கப்பண்பை வெளிப்படுத்துவதற்கு ஒரு தேர்வாக உள்ளன. (அன்பின் மகிழ்வு 47

# மகிழ்வின் மந்திரம் (Amoris Latitia)




மகிழ்வின் மந்திரம்: நேர்மையான மனசான்றுகள் காக்கப்பட...

அரசுகள், கருத்தடை, மற்றும், குடும்பக் கட்டுபாட்டு முறைகளைக் கட்டாயமாகத் திணிக்கும்போது, கருக்கலைப்பிற்கும் கூட ஆதரவு தெரிவிக்கும்போது, திருஅவை அவற்றை உறுதியுடன் எதிர்க்க வேண்டும் (அன்பின் மகிழ்வு 42)

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் **அன்பின் மகிழ்வு** (Amoris Latitia) திருத்தூது அறிவுரை மடலின் இரண்டாவது பிரிவில், **குடும்பத்தின் இன்றைய உண்மை நிலை** என்ற பகுதியின், 42வது பத்தியில், பதிவுசெய்துள்ள கருத்துக்கள்....

உலக அரசியலால் ஊக்குவிக்கப்பட்ட, பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்கு எதிரான மனநிலையால் மக்கள் தொகை குறைந்து வருகிறது. இந்நிலை, தலைமுறைகளுக்கு இடையேயுள்ள உறவுக்கு உறுதியளிக்காத ஒரு சூழலை உருவாக்குவதோடு, காலப்போக்கில், பொருளாதார வறுமை, மற்றும், வருங்காலம் பற்றிய நம்பிக்கையை இழக்கும் ஆபத்திற்கும் இட்டுச்செல்கின்றது. உயிரித் தொழில்நுட்ப வளர்ச்சியும், பிறப்பு விகிதத்தில் மிகப்பெரும் எதிர்தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. தொழில்மயமாக்கல், பாலியல் பற்றிய எண்ணங்களில் உருவாகியுள்ள கட்டுபாடற்ற சுதந்திரம், மக்கள்தொகை பெருக்கம் பற்றிய அச்சம், பொருளாதாரப் பிரச்சனைகள்... போன்ற மற்ற அம்சங்களும், பிறப்பு விகிதம் குறையக் காரணமாக உள்ளன. நுகர்வுப்போக்கின் அதிகரிப்பும், மக்கள், பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதைத் தடுக்கின்றது. பிள்ளைகள் இல்லாமல் இருந்தால், ஒருவகையான சுதந்திரம், மற்றும், வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கலாம் என்று, மக்கள் கருதுகின்றனர். இத்தகைய காரணங்களால், வாழ்வை வழங்குவதில் தாராளமாக இருக்கும் தம்பதியரின் நேர்மையான மனசான்றுகள், பிள்ளைகளைப் பெற்றெடுப்பதில் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு இட்டுச்செல்லக்கூடும். இத்தகைய மனச்சான்றின் மாண்பை பாதுகாக்கவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே, அரசுகள், கருத் தடை, மற்றும், குடும்பக் கட்டுபாட்டு முறைகளைக் கட்டாயமாகத் திணிக்கும்போது, கருக்கலைப்பிற்கும்கூட ஆதரவு தெரிவிக்கும் போது, திருஅவை அவற்றை உறுதியோடு எதிர்க்கவேண்டும். (அன்பின் மகிழ்வு 42)

# புனித தேவ அருளப்பர்

சேவா வீரர்.
கி.பி. 1495 – 1550)
மார்ச் – 08

## பின் தங்கிய மக்களுக்குத் தொண்டு செய்ய நல்ல ஆற்றலை இறைவன் உங்களுக்கு அளித்துள்ளார்!

இவர் போர்த்துக்கல் நாட்டினர். ஆனால் சிறுவயதிலே ஸ்பெயின் நாட்டிற்கு ஓடி அங்கு ஒரு செல்வந்தரின் ஆடுகளை மேய்த்து நாட்களைச் செலவழித்தார். பிறகு பிரான்சுக்குச் சென்று படைவீரனாக மாறினார். நாற்பதாம் வயதில் தமது பழைய பாவ வாழ்க்கையை நினைத்துத் துயரத்தில் ஆழ்ந்தார். மனம் மாறி இறைப்பணிக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணிக்க முடிவெடுத்து ஆப்பிரிக்கா சென்றடைந்தார். மூர் ஜாதியினரின் கொடிய வேதனைக்குள்ளாகியிருந்த கிறிஸ்த்தவர்களை மீட்க ஆவல் கொண்டார். சிலருடைய அறிவுரையைக் கேட்டு ஸ்பெயின் திரும்பினார். அங்கு படங்கள், சுரூவங்கள் போன்றவைகளை விற்கும் பணியில் இறங்கினார். ஆனால் அவருக்கு இன்னும் இறை அமைதி திரும்பவில்லை.

இச்சூழலில் ஒரு முறை அவிலா ஜோன் கொடுத்துக்கொண்டிருந்த மறையுரையைக் கேட்டுப் பலர் முன்னிலையில் தன்னைச் சாட்டையால் அடித்துக் கொண்டார். தமது பாவ வாழ்க்கையை ஆண்டவர் மன்னிக்க வேண்டுமென மன்றாடினார். இவரது மனம் உடைந்த நிலை கண்டு இவரை மனநோய் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கே அவிலா ஜோன் அவரைச் சந்தித்தார். 'பின் தங்கிய மக்களுக்கத் தொண்டு செய்ய நல்ல ஆற்றலை இறைவன் உங்களுக்கு அளித்துள்ளார்' என்று இறைவாக்கு உரைத்ததுபோல் அவிலா அறிவுரை அளித்தார். இச்சொற்கள் அவருக்கு முழுமன அமைதியைக் கொடுக்கவே உடனே மனநோய் மருத்துவமனையினின்று வெளிக்கிளம்பினார்.

நோய்வாய்ப்பட்டவர்களைச் சுமந்து கொண்டு வந்து சேர்த்து அவர்களுக்கு மருத்துவம் அளித்து வந்தார். அங்கே அவர்களை அருமை பெருமையாகக் குளிப்பாட்டி, பாடுபட்ட சுரூவத்தைக் கொடுத்து முத்தி செய்யச் சொல்வார். கட்டிலில் படுக்க வைத்து, அருகில் உள்ள குருவானவரைக் கூப்பிட்டு ஒப்புரவு அருட்சாதனத்திற்கு வழி பண்ணுவார். அவர்களை நன்கு பேணியபின், வெளியில் சென்று வீதிகள்தோறும் பொருள் உதவி தருமாறு இயேசுவின் பெயரால் ஓலமிட்டுக் கதறுவார். அதன் பயனாகச் செல்வந்தர்கள் தங்கள் பணப்பெட்டியைத் திறந்து தாராளமாகப் பொருள் கொடுத்து உதவினர். இந்தத்தொண்டு நிலையாக நடைபெற ஆண்டவர் உறுதுணையாயிருந்தார் என்பதை எண்பிக்கும் வகையில் இவருடன் ஒத்துழைத்தவர்கள், 20 ஆண்டுகளுக்குப் பின் 'நன்மைசெய்யும் சகோதரர்" என்ற பெயரில் மருத்துவமனைகள் தொடங்கினார்கள். இன்று இவர் காட்டிய வழியைப் பின்பற்றி உலகெங்கும் ஏறத்தாழ 100 மருத்துவமனைகள் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தொண்டினை 10 ஆண்டுகள் நிறைவேற அயரா உழைப்பினால் அருளப்பர் நோய்வாய்ப்பட்டார். ஒரு முறை நற்கருணை நாதர் முன் மண்டியிட்டு மன்றாடிக் கொண்டிருக்கும்போது, இவரது நிலையை உணர்ந்து இரக்கப்பட்டு, ஒசோரியா என்ற பெயர் கொண்ட பெண்மணி தமது ஊர்தியில் கட்டாயப்படுத்தித்தூக்கிச் சென்றார். அவருக்குச் சத்துணவுகொடுத்தார். 'எனது ஆண்டவர் புளித்த காடியைத்தானே குடித்தார்?" என்ற சொல்லிச் சத்துணவை ஒதுக்கிவிட்டார். பிரபுக்கள், ஜோன் அந்த வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டதை அறிந்து, அவரை அணுகி அவரது ஆசீர் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று மன்றாடினார். 'நான் ஒரு பாவி, நான் பலருக்கும் துர்மாதிரிகையாய் வாழ்ந்தவர்" என்று சொல்லி ஆசீர் அளிக்க மறுத்தார். இருப்பினும் அவரது உயிர் பிரிவதற்குச் சற்றுமுன், அருகிலிருந்த பேராயர் அவரைச் சந்தித்து நகர் முழுவதையும் ஆசீர்வதிக்கக் கேட்டுக் கொண்டார். பின்னர் ஒரு ஆலயத்திற்குக் கொண்டு போகப்பட்டு இதே நாளில் நற்கருணை நாதர் முன் செபித்துக்கொண்டிருக்கும்போது அவரது தூய ஆன்மா இறைவனிடம் சென்றது.

**சிந்தனைக்கு:**

நாம் செய்யும் அறச் செயல்களை எப்போதும்
இயேசுவுக்காக செய்ய வேண்டும்!

# மருத்துவமும் ஆரோக்கியமும்



## நீரிழிவைக் கட்டுப்படுத்த எளிய வழிமுறைகள்

♦ அதிகமாக நார்ச்சத்து உணவு வகைகளைச் சேர்க்கவும்

♦ காலை உணவுக்கு முன் நாம் அரை டேபில் ஸ்பூன் வெந்தயம் சாப்பிட்டு வந்தால் நீரிழிவுக்காக நாம் பயப்பட தேவையில்லை

♦ காலையில் வெறும் வயிற்றில் அதிக தண்ணீர் குடித்த பிறகு குறைந்தது 15 நிமிடங்கள் நடை பயிற்சியை மேற்கொண்டால் நீரிழிவை கட்டுப்பாட்டில் வைக்க முடியும்.

♦ மூன்று வேளையும் அரிசி உணவை தவிர்ப்பது நல்லது. மதியம் சோறு மற்ற இரண்டு வேளைகளில் கோதுமை, குரக்கன் கம்பைப் பயன்படுத்தலாம்.

♦ உடலை மட்டுமல்ல மனத்தையும், ஆரோக்கியமாக வைத்திருந்தால் இந்த நீரிழிவு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

♦ இயற்கை உணவுகளைப் பயன்படுத்தினால் நாம் சர்க்கரை நோய்க்குப் பயப்பட வேண்டியதில்லை.

♦ பப்பாளிப் பழம், கொய்யா, ஆப்பில் போன்ற பழங்கள் நீரிழிவு நோய்க்கு ஏற்றவை.

♦ பாகற்காய், சுண்டைக்காய், உணவில் பயன்படுத்தலாம்.

♦ நீரிழிவு வந்த பிறகு உண்ணா நோன்பு இருப்பதை அவசியம் தவிர்க்க வேண்டும். இவர்கள் மூன்று வேளை உணவை ஐந்து வேளையாகப் பிரித்து உண்பதன் மூலம் சர்க்கரையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

♦ நீரிழிவு வந்தாலும் வராவிட்டாலும் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது இரத்தப்பரிசோதனை செய்து பார்த்து இதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது ஆரோக்கிய வாழ்வின் முதல் கடமையாகும்.

♦ நீரிழிவு நோயினை Silent Killer என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். உடலில் எந்த உபாதைகளும், ஏற்படுத்தாமல் அமைதியாக உயிரைக் கொல்லும்.

♦ நீரிழிவு நம் முன்னோர் பரம்பரை மூலமாக மற்றும் தவறான உணவு முறைகளின் வாழ்வு முறைகளால் உருவாகிறது.

## வாயுவைக் கட்டுப்படுத்த சில டிப்ஸ்

1. வாயுத் தொல்லை உருவாகும் சமயங்களில் பப்பாளிப் பழத்தின் ஒரு துண்டு எடுத்து வாயில்போட்டுக்கொள்ள வேண்டும். இது வாயுவைச் சமன் செய்து ஜீரண அமிலங்களைத் தூண்டும்.

2. சீரகம், ஏலக்காய், சோம்பு போன்றவை மிகச் சிறந்த நிவாரணிகளாகும். வாயுத் தொல்லை ஏற்பட்டவுடன் இதனை வெறும் வாயில் மென்றால் உடனே நல்ல பலன் காணலாம்.

3. புதினா அமில உற்பத்தியை தடுக்கிறது. வாயுவினால் அவதிப்படும்போது புதினா இலையைச் சிறிதுமென்றால் நல்ல தீர்வு கிடைக்கும்.

4. பேரிக்காயும் வாயுத் தொல்லையிலிருந்து விடுவிக்கின்றது. தினமும் ஒரு பேரிக்காயை சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கும்.

5. தேங்காய்த் துருவல் அல்லது தேய்காய் பால் வாயுத் தொல்லையைக் குணமாக்கும்.

சுக்கு கலந்த வெந்நீரை அடிக்கடி குடித்து வந்தால் வாயுத்தொல்லை நிற்கும். காய்ந்த கருவேப்பிலை ஓமம், கசகசா, சுண்டக்காய் வத்தல், மற்றும் சுக்கு இவற்றை நெய்யுடன் வறுத்து பொடியாக்கி சாப்பிட்டால் வாயுத் தொல்லை குணமாகும்.

# தவக் காலம்!



தவக்காலம் இது தவக்காலம்,
தவறுகளை உணர்ந்து வருந்தும் காலம்,
இறை மகன் சுதனின் பாடுகளை,
தவறாது சிந்தித்து மனம் திருந்தும் காலம்!

பாவங்கள் செய்த காலங்களை,
பக்தி பற்றுடன் நினைக்கும் காலம்,
பாவ மன்னிப்புப் பெற தேவனிடம் பாவ,
சங்கீர்தனம் செய்யும் காலம்!

இறை இரக்கத்தால் கருணை பெறும் காலம்,
இயேசுவின் சிலுவையை இதயத்தில் சுமந்து,
இறையன்பில் இணையும் காலம்,
இறை உறவில் வளர்ந்திட,
ஆசிர் பெறும் காலம்!

அகத்தின் இருளைப் போக்கிட,
அருளை அடையும் காலம்!
அண்ணல் இயேசுவின் அன்பால்,
அமைதியாக வாழும் காலம்!!

## மன்னிப்பு!

மன்னிப்பதென்பது நீ எதிரிக்கு போடும் பிச்சையல்ல, மாறாக நீ உம்மை முழுமையாக குணப்படுத்தி, நீ இழந்து போன மகிழ்ச்சி மற்றும் மன நிம்மதியை மீண்டும் பெற்றெடுக்க நீ செய்யும் ஒரு முயற்சியாகும்.

**மன்னித்தால் மன்னிக்கப்படுவீர்கள்** என்று இயேசு சொன்னதை நாங்கள் எம் வாழ்வாக்கிட மன நிம்மதியோடு வாழும்போது இறைவனின் இரக்கம் எந்நேரமும் எம்மை சூழ்ந்திருக்கும் என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது.

# இறையருளில் நீந்திட..

அருட்பணி C. J. அன்ரனி பாலா

**முன்னுரை**

தவக்காலம் இறைவன் மனிதர்களாகிய எங்களுக்கு வழங்கும் அன்புக் கொடைகளில் ஒன்று. மிக மிக அருமையான காலம். ஆண்டு முழுவதும் பரபரப்பாகிப் பல்வேறு கடமைகள் பொறுப்புகளால் வருகின்ற சோதனைகள், வேதனைகள், தோல்விகள், ஏமாற்றங்கள், விரக்திகளால் மூழ்கடிக்கப்படும் நாம் எமக்குள் சென்று எம்மையே உள்ளார்ந்த ஆய்வு செய்து, எம் வாழ்வை சீர்தூக்கிப் பார்த்து கழுவிப் புடமிட்டு, உரமிட்டு புது உறவை வளர்க்கும் காலமாகும்.



**எம்மைச் சுற்றி இறையருள்**

இறைவன், மனிதன், உலகம் (பிரபஞ்சம் உட்பட) ஆகிய இம் மூன்றிற்குள்ளும் அடங்கிவிட்ட அனைத்தின் வழியாக இறையருள் எமக்கு வாரி வழங்கப்படுகின்றது. இரக்கமுள்ள இறைவன் தருகின்ற இறையருளின் சந்தர்ப்பங்களை நாள்தோறும் நாம் கவனமுடன் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும். தவறுவோமாயின் நாம் தொலைந்து விடுவோம். என்னால் எல்லாம் செய்யமுடியும். வேறெவரும், வேறெதுவும் எனக்குத் தேவையில்லை என்னும் அசட்டுத்துணிவுடன் எம்மை மட்டும் நம்பி புறப்படக் கூடாது. ஏனெனில் எம்மைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருப்பவை யாவும் சரியாக இயங்கி இறையருளை எமக்குத் தராவிடில் விரக்தியும் அவநம்பிக்கையுமே மிஞ்சும்.

எடுத்துக்காட்டாகப் பரீட்சைக்குத் தோற்றும் ஒருவருக்கு அவர் கற்ற கல்வியோ, தன்னிலே அவர் வைத்திருக்கும் நம்பிக்கையோ மட்டும் கைகொடுக்காது. மாறாகத் தண்ணீரில் மீன் இருப்பது-போல் அவர் எப்பொழுதும் இறையருளில் நீந்திக் கொண்டேயிருக்கவேண்டும். வீட்டுச் சூழல், காலநிலை, பிரயாணம், சென்றடையும் நேரம், அனுமதி அட்டை மற்றும் எழுதுகருவிகள் மறவாமை, பரீட்சை நிலைய அமைதியான சூழல், பொருத்தமான இடம் போன்ற-வை சரியாக அமையவேண்டும். ஒரு சிறு தவறு ஏற்படுமாயின் பரீட்சைக்கான அருள்நிலை இல்லாமற் போய்விடும். அதுபோல் ஒரு வாகனத்தை ஓட்டும்போது மிகவும் திறமையான ஓட்டுனராக இருந்தாலும் கூட, தனது திறமையில் மட்டும் எவரும் நம்பிக்கை வைக்கமுடியாது. வாகன நெரிசல், காலநிலை மாற்றம், ஏனைய வாகனங்கள் தவறுதலாக வந்து மோதுதல், ஓட்டும் வாகனத்தில் திடீர்பழுது ஏற்படுதல் போன்றவை நிகழாமல், எல்லாமே சரிவர இயங்கவேண்டும். இல்லாவிடில் இலக்கையடைய முடியாது. எனவே எம்மைச்சுற்றி நிகழ்பவை யாவும் இறைசித்தப்படி, சரியாக எமக்கென இறைவனால் நிகழ்த்தப்படுவதே இறையருள் ஆகும். எனவேதான் என்ன நேர்ந்தாலும் தந்தையாகிய இறைவனுக்கு இயேசுக் கிறிஸ்து வழியாகத் தூய ஆவியாரில் நன்றி கூறுங்கள் என்று புனித பவுல் கூறுகின்றார்.

**காத்திருத்தல் இனிமையானது**

இரக்கமுள்ள இறைவன், மனிதர்களாகிய எமக்கென வகுத்திருக்கும் மாபெரும் திட்டப்படி எல்லாருக்கும் "காய்களை நகர்த்து"கின்றார் எடுத்துக்காட்டாக, நாம் விரும்புவதைச் சரியாக நிறை-வேற்றுவதற்காக எம்முடன் தொடர்புடையவர்கள் மற்றும் தொடர்புடையவைகளை சரியாகச் "காய் நகர்த்தி" ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டே எமது செயல்-களை நாம் செய்ய அவர் அனுமதிக்கின்றார். அவரது அனுமதிக்காகவும் செயலாற்றலுக்காகவும் நாம் செபத்தின் வழியாகப் பொறுமையோடு காத்திருக்-காமல் அவசரப்படுவோமாக இருந்தால் தேவையற்ற துன்பங்களை நாம் சந்திப்பதோடு, அவரில் அவநம்பிக்கையும் உருவாகும். தூய ஆவியாரின் துணைகொண்டு உய்த்துணர்ந்து செயலாற்ற, செபத்-தின் மூலம் இறையருளுக்காக (எமது விடயம் நன்றாக அமையவேண்டிய சூழ்நிலையை இறைவன் ஏற்படுத்தித் தரும்வரை) பொறுமையுடன் காத்திருத்தல், அவருக்காக நம்பிக்கையுடன் காத்திருத்தல் மிகவும் அவசியம். ஏனெனில் எமது விருப்பத்தையோ, சித்தத்தையோ, திட்டத்தையோ அல்ல, மாறாக இறைவனின் விருப்பத்தையே எப்போதும் நாம் நிறை-வேற்றவேண்டும்.

"என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" (மாற் 14:36), என்று கூறிச் செபித்த இயேசு எப்போதும் தந்தையின் விருப்பத்தையே நிறைவேற்றினார். இம்மனமாற்றத்தின் காலம் இறையிரக்கத்திற்காக அதாவது இறையருளுக்காக ஏங்குகின்ற காலமாகும். செப, தப, ஒறுத்தல், பகிர்தல் வாழ்வின் மூலம் இறையருளில் நீந்துவதற்கு முயற்சிக்கும் காலமாகும். இதை மேலும் ஆழமாக விளங்கிக்கொள்ள, எமக்காகச் செய்யப்பட்ட மாபெரும் உச்சமான தியாகமே, கல்வாரி அன்பு என்று உணர்ந்து கொள்ளவேண்டும். இந்த உலகில் எத்தனையோ மில்லியன்களுக்கு மேலானவர்கள் தமது உறவுகளுக்காக அல்லது தாயக மக்களுக்காக, பணம், பட்டம், பதவி, சொத்து, சுகம், உயிர் போன்று பல்வேறு தியாகங்களைச் செய்துள்ளார்கள். ஆனால் ஒரேயொருவரின் தியாகம் மட்டுமே இன்றுவரையும் ஏன் உலக முடிவு வரை போற்றப்படுகின்றது. அது இயேசுவின் தியாகம் மட்டுமே. ஏனெனில் இத்தியாகம் மட்டுமே நிபந்தனையற்ற மன்னிப்புடன் கூடிய தியாக-மாகும்.

**கல்வாரியின் அன்புச் சமூகம்**

அதாவது தந்தையுடன் இறையுறவில் (அருளில்) ஒன்றிணைந்து, தனக்கும் தந்தைக்கும் இடையே உலவுகின்ற அன்புறவாகிய தூய ஆவியா-ரால் பிறப்பு முதல் பாடுகள் இறப்பு உயிர்ப்பு விண்ணே-ற்றம் வரை வழிநடத்தப்பட்ட, தூய அன்புடன் கூடிய தியாகமாகும். இன மத மொழி பேதம் பாராமல், புறவினத்தான் (நூற்றுவர் தலைவன், கிரேக்கர்), யூதன் பாவி விபச்சாரி தொழுநோயாளி, தீவிரவாதி, துரோகி (யூதாஸ், பேதுரு, ஏனைய திருத்தூதர்கள்), எவராக இருந்தாலும் நிபந்தனையில்லாமல் ஏற்றுக்கொண்டார். மன்னித்தார், அன்பு செய்தார். ஆகவேதான் "வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவா 14:6), என்று மொழிந்த "இவராலேயன்றி வேறெவராலும் மீட்பு இல்லை. ஏனெனில் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை" (திப 4:12). ஏனைய மதங்கள் கூட மனித குலத்திற்கான இயேசுவின் மீட்புப் பற்றி மறைமுகமாகப் பேசுகின்றன.

எனவே தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு இறையருளில் நீந்துவதற்கு எம்மையும் இயேசு அழைக்கின்றார். செபத்தில் நிலைத்திருந்து இறைவன் சொல்வதை மட்டும், அவரிடம் அனுமதி பெறும்வரை காத்திருந்து நிறைவேற்ற இயேசு அழைக்கின்றார். நிபந்தனையற்ற விதத்தில் ஏற்றத்தாழ்வுகள் பாராது, புரிந்துணர்வுடனும் சகிப்புத்தன்மையுடனும் அயலாரை அன்பு செய்து அன்பியச் சமூகமாக மனம் மாற அழைக்கின்றார். இதுவே கல்வாரி அன்பு. பேழையில் வைக்கப்பட்டிருக்கும் நற்கருணையும் உலகமெங்கும் மானிட மீட்புக்காக, உயிரோடிருக்கப்போகும் இறுதி மனிதன் பாவம் செய்யும்வரை, ஒவ்வொரு மூலையிலும் அன்றாடம் இருபத்திநான்கு மணிநேரமும் அனைத்துப் பீடங்களிலும் (மீளநினைவு கூரப்படுவது மட்டுமல்ல) கண்காணா வகையில் இரத்தம் சிந்தப்பட்டு மீளநிகழ்-த்தப்படும் திருப்பலியும் இந்தக் கல்வாரியின் அன்பையும் நிபந்தனையற்ற மன்னிப்பையும் எடுத்துக்-காட்டுகின்றன.

**அன்பர்களோடு வாழ விரும்பினார்**

"தாம் இவ்வுலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதை இயேசு அறிந்திருந்தார். உலகில் வாழ்ந்த தமக்குரியோர் மேல் அன்பு கொண்டிருந்த அவர் அவர்கள்மேல் இறுதிவ-ரைக்கும் அன்பு செலுத்தினார்". தந்தை அனைத்தையும் தம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதையும் தாம் கடவுளிடமிருந்து வந்ததுபோல் அவரிடமே திரும்பிச் செல்லவேண்டும் என்பதையும் அறிந்தவராய்,.. சீடர்க-ளுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்." (யோவா 13:1-5). தாழ்ச்சியின் உருவமாக விளங்கிய இயேசுவின் செயல்கள் இவ்விறுதி இரவுணவு வேளையில் வழமையான வருடங்களைவிட வேறுபட்டிருந்ததை சீடர்கள் கண்டுகொண்டனர். கால்களைக் கழுவுதல், காட்டிக்கொடுப்பு, மறுதலித்தல், தனியே விட்டு ஓடிவிடுதல், போன்ற துரோகத்தனங்களை அறிவித்தல், அறிவுரைகள், அன்புக்கட்டளை கொடுத்தல், சீடர்களுக்காகவும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டோருக்காகவும் மன்றாடுதல், (அவ்வேளை சீடர்களுக்கு விளங்கமுடியாததாயிருந்த) நற்கருணையையும் குருத்துவத்தையும் ஏற்படுத்துதல் போன்ற பல புதிரான புதிய விடயங்களை சீடர்கள் அவரில் கண்டுகொண்டனர். தான் அன்பு செய்த மனித-குலம் தீயவனோடு செய்யப்போகும் போராட்டமும் அவநம்பிக்கையும் துரோகத்தனங்களும் இறைவனின் இரக்கத்திற்கெதிராக இடம்பெறப்போகும் அசிங்கங்களும் பாவப்பெருக்கங்களும் அவரது நெஞ்சைக் கலங்க-டித்திருக்கும். இத்துன்ப வேளையிலேயே எம்மோடு எப்போதும் இருக்க விரும்பித் தனது இறப்பின் புதிய உடன்படிக்கையாக (அன்பின் மரண சாசனமாக) நற்கருணையையும் குருத்துவத்தையும், மறுநாள் தான் அனுபவிக்கப் போகும் பாடுகள் இறப்பின் நினைவாக ஏற்படுத்திய இயேசு, விலைமதிக்கப்பற்ற "மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டி" (1பேது 1:19) யாகிய தனது கல்வாரிக் இரத்தத்தினால் முத்திரையிட்டு உறுதிப்படுத்தினார்.

**உண்மையாகிய இயேசுவும் நானும்**

இவ்வாறு அன்று கல்வாரிக் குன்றை மட்டுமல்ல முழு உலகையும் கழுவித் தூய்மைப்படுத்திய இரத்தத்-தினால் முத்திரையிடப்பட்ட நற்கருணையே, அவரருளில் நாம் நீந்துகின்றோம் என்பதன் உண்மைப் பிரசன்னமாகும். ஒருபோதும் இறையருளுக்கு வெளியே எமது தவறால் நாம் தூக்கி எறியப்பட்டுவிடக்கூடாது. அவ்வாறாயின் திரும்பவும் நல்ல பாவ அறிக்கை செய்து (கள்ளப் பாவ அறிக்கையல்ல) முத்தரப்புடனும் (இறைவனுடன், திருஅவையுடன், என்னுடன்) ஒப்புரவாகவேண்டும். பொய் சொன்னேன் களவெடுத்தேன் சுவாமி, ஒணா-னைக் கொன்றேன், அணிலைக் கொன்றேன் சுவாமி, என்ன பாவம் செய்தேன் ஒரு பாவமும் செய்யவில்லை சுவாமி, என்று சொல்வது கள்ளப் பாவ அறிக்கையாகும். மாறாகச் சமாரியப் பெண் போன்று வகைதொகையோடு நல்ல பாவஅறிக்கை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். தன்னையும், தன் முன்னே நின்ற இயேசு என்ற உண்மையையும் ஏமாற்றிப் பொய் சொல்ல அவளால் முடியவில்லை. எனவே ஆழமான நல்ல பாவ அறிக்கை செய்த பின்பே, வாழ்வு தரும் தண்ணீராகிய தூய ஆவியாரைப் பெற்று இயேசுவின் திருத்தூதுவரானாள்.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 01 பேராயர்...

எவ்வாறாயினும் பாஸ்கு குண்டுத்தாக்குதலின் ஆரம்ப கர்த்தாவை கையகப்படுத்த மேற்குறிப்பிட்ட துறைகள் செயல்படாது என்பதை தெளிவாக நாமறிவோம்.

நாம் அதிகாரிகளிடம் வேண்டுவது, பாஸ்கு ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட ஆரம்ப கர்த்தாவையும் அதற்கு பக்கபலமாக இருந்தவர்கள், நிதியுதவி புரிந்தவர்கள் தாக்குதலை நடாத்த உதவியவர்கள், முன்னறிவித்த தாக்குதலைத் தடுக்க முனைந்தவர்களை செயல்பட விடாது தடுத்தவர்கள் போன்றோரை விசாரணை செய்து அனைவரையும் நீதியின் முன் நிறுத்தாமைக்கான காரணத்தையும், தாக்குதல் நடந்த இரண்டு வருடங்களாகியும் மேற்குறிப்பிட்டவர்களைக் கைது செய்யாமை பற்றிய உண்மையையும் வெளிப்படுத்த வேண்டும். பாஸ்கு தாக்குதல் விசாரணையின் இறுதி அறிக்கையில் பொதுபல சேனா அமைப்பை தடைசெய்வதுபற்றிய பரிந்துரை, பலவிதங்களில் சமூகத்திற்குள் வலம் வருகின்றன. அதுபற்றி நான் கூற விரும்புவதாவது, கொடூர தாக்குதலுக்கு தொடர்புள்ளவர்களைப்பற்றியேயன்றி நாட்டின் தேசிய பௌத்த அமைப்பை தடைசெய்வது பற்றியல்ல என்பதேயாகும். இவ்வாறான பிரச்சாரங்களினால் பாஸ்கு தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய பிரமுகர்கள் தப்பிக்க வழியமைக்கப்படும் என்பதை நாம் அறிவோம். பாஸ்கு குண்டுத்தாக்குதல் ஏற்பட்ட முதல் நாளிலிருந்து அதன் ஆரம்ப கர்த்தாவையும் புலனாய்வு துறையின் அறிவித்தலை உதாசீனப்படுத்தியவர்களையும் நீதியின் முன் நிறுத்துமாறு கூறினோம். உண்மையான குற்றவாளிகளை கண்டறிவதைத் தவிர்த்து, சமூகத்திற்குள் தேவையில்லாத பிரச்சனைகளை கிளறி, சிந்தனையை சிதறவிடாது விழிப்பாயிருக்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம். பாஸ்கு தாக்குதலின்பின் எமக்கு உறுதுணையாக இருந்தவர்கள் மதிப்புக்குரிய தேரர்களும், பிறமத சகோதர சகோதரிகளுமேயாவர் என்பதை நன்றியுடன் நினைவுக் கூறுகிறேன். குண்டுத் தாக்குதலில் இறந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் கத்தோலிக்க மக்கள் மாத்திரமல்ல, கிறிஸ்தவ, இந்து முஸ்லிம் விசுவாசிகளுமாவர். தீவிரவாத தாக்குதலுக்கு மதம், இனம், மொழி இல்லை. அதனால் இதற்கு பக்கபலமாக இருப்பது சாபக்கேடாகும்.

தாக்குதல் பற்றிய முன்னறிவித்தல் கிடைத்தும் சுயநலமாக சிந்தித்து தாக்குதலைத் தடுக்காதவர்கள் பூமிக்கு இளைத்த பெரும் கொடுமையாகும். அவர்கள் அரசியல் தலைவர்களிடம் அடைக்கலம் தேடி, பரிசுத்தவான்களைப் போல நடித்து டீல் அரசியலை நாடுகிறார்கள். மக்களுக்கு சேவை செய்வதாக அரசியல் பதவிகளில் பிரவேசித்து அப்பாவி மக்களுக்கு ஏற்படவிருக்கும் அழிவை அறிந்தும் அதைத் தடுக்காதவர்கள் ஒருநாள் கணக்குசொல்ல வேண்டும் என்பதை நாம் ஞாபகப்படுத்துகிறோம். தமது மதத்திற்கு, இனத்திற்கு, கட்சிக்குரியவர்கள் என்பதால் குற்றமிளைத்தவர்களை பாதுகாப்பது, பல துறைசார்ந்தவர்களை வற்புறுத்தி பணம் வீசி, சம்பந்தப்பட்ட ஆவணங்களை அடிமட்டத்திற்கு இட்டு, அரசியல் டீலில் ஈடுபடும் ஈனர்களின் பின்புறத்தில் மறைகிறார்கள். இவர்கள் இம்மரண, துன்ப புலம்பல்பற்றி ஒருநாள் கணக்குக்கொடுக்க வேண்டும். அவர்களுக்காக மனம் வருந்துகிறோம். அதிகார கதிரையில் அமர்ந்தாலும், பொய்சொல்லி தப்பிவிடமுடியாது என்பதை அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

நாம் ஜனாதிபதியிடம், இறுதி விசாரணையின் உண்மை நிலையை வெளியிட்டு, பாஸ்கு தாக்குதலுக்கு பக்கப்பலமாக இருந்த, நிதியுதவி வழங்கிய குற்றவாளிகளை உடனடியாக நீதியின் முன் நிறுத்த காலம் தாழ்த்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். ஆவணங்களை இருட்டடித்து யாரையும் தப்ப இடமளியோம். தாக்குதல் ஏற்பட்டு இரண்டு வருடமாகியும் பொறுமைக்குக் காரணம், நீதி நிலைநாட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு இருந்ததினாலேயே. நாம், முதன்முறையாக எதிர்வரும் ஞாயிறு பங்குனி 07ஆம்திகதி ஆலய வழிப்பாட்டில் கறுப்பு உடையணிந்து அமைதியான எதிர்ப்பு செயல்பாட்டில் ஈடுபடுவோம். எதிர்வரும் சித்திரை 21ஆம் திகதியாகும்போது உண்மையை அறிந்தும் நீதியை நடைமுறைப்படுத்தாமையை எதிர்த்து கறுப்பு உடையணிவது மாத்திரமல்ல, தாக்குதலின் இரண்டாவது வருடம் பூர்த்தியாகும் சித்திரை 21ஆம்திகதிக்கு கறுப்பு கொடி பறக்கவிட்டு எமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்பதை அறிவிக்கிறோம்.

(எமது ஆர்ப்பாட்டம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு இறுதி அறிக்கைக்கல்ல எனவும், இறுதி அறிக்கையை ஆராய்ந்து அதன் கருத்துக்களுக்கு பின்நாளில் வேறு அறிக்கையை வெளிவிடுவோம் என்பதையும் கூறிக்கொள்கிறோம்)

## 03 திரும்பி வாருங்கள்...

உள்ளது. இது நம் சக்தியைச் சார்ந்தது அல்ல. இறைவன் எடுத்துவைக்கும் முதலடியோடு அது துவங்குகிறது. அதாவது, அதற்குரிய அருளை அவரே வழங்குகிறார். நாம் கடவுளிடம் திரும்பிச்செல்வது என்பது, அவரும், அவரின் கருணையும், நமக்கு எவ்வளவு தேவை என்பதை நாம் ஏற்றுக்கொள்வதைச் சார்ந்தது.

சாம்பலை நெற்றியில் வாங்க நாம் தலை குனிகிறோம். இத்தவக்காலத்தின் இறுதியில் இதைவிட கீழாகக் குனிந்து, நம் சகோதர, சகோதரிகளின் கால்களை கழுவ உள்ளோம். ஆம், மற்றவர்களை நோக்கி தாழ்ச்சியுடன் உள்ளும் புறமும் குனிந்து இறங்கிவர உதவுகிறது தவக்காலம். ஏனெனில், மீட்பு என்பது, மகிமையில் மேலேறிச் செல்வதல்ல, மாறாக, அன்பில் கீழிறங்கி வருவதாகும். இத்தவக்காலத்தில் இயேசுவின் சிலுவையின்முன் நின்று, அவரின் காயங்கள் குறித்து தியானிப்போம். அந்த காயங்களாலேயே நாம் குணப்படுத்தப்பட்டோம். அந்த காயங்கள் வழியாக, தன் முடிவற்ற கருணையுடன் இயேசு, நமக்காகக் காத்திருக்கிறார். அன்புகூரப்படுவதில் கிட்டும் மகிழ்வைக் கண்டுகொள்ள, நாம் இறைவனிடம் திரும்பி வருமாறு அவரே நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

இவ்வாறு திருநீற்றுப் புதன் மறையுரையை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## 02 விசுவாசிகள்...

பல மாதங்களாக எதிர்பார்த்திருந்தும் நீதி கிடைக்காமையினால், மக்கள் நியமித்த அரசினால் நீதி கிடைக்கும் என்ற எதிர்பாப்பு இருந்தது. பட்டப்பகலில் 269 பேரின் உயிர்கள் பறிக்கப்பட்ட சமூக கொலைஞர்கள், பலரை அங்கவீனமாக்கி, நாட்டின் சமாதானம், நாட்டின் பொருளாதாரம், நாட்டின் இறைமையைக் கெடுத்த சமூக கொலைக்கு காரணமானவர்கள் இன்றுவரை இனங்காணப்படவில்லை.

ஞாயிறு குண்டுத்தாக்குதல் கொலைஞர்களுக்கு எதிராக, கடந்த அரசும், ஆளும் தரப்பும் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தால், குற்றவாளியைக் கண்டுப்பிடிக்க இந்தளவு காலதாமதமாகியிருக்காது. அதனால் முன்னால் அரசுக்கும், ஆளும் தரப்புக்கும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் அவசியம் இல்லை என்பது தெளிவாகிறது. அதனால் தொடர்ந்தும் பொறுமையாக இருக்க எம்மால் முடியாது. எமது திருச்சபை எதிர்ப்பைத் தெரிவிக்கும் செயல்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. அதன் ஆரம்பக்கட்ட செயல்பாடாக எதிர்வரும் ஞாயிறு (மார்ச் 07ம்திகதி) Black Sunday அதாவது கறுப்பு ஞாயிறு என பெயரிட்டுள்ளோம். அன்றைய நாள் இறைவழிப்பாடுகளில் கலந்துக்கொள்ளும் விசுவாசிகள் அனைவரும் கறுப்பு உடையணிந்து வழிப்பாடுகளில் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## 04 அன்பிய...

விழிப்புணர்வு வழங்குதல் தேவைக்கேற்றவாறு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

14. இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு அன்பியங்களுக்கு பொருத்தமான தலைவர்களை ஏற்படுத்துதல், அனைத்து நிலைகளிலும் இடம்பெற வேண்டியதோடு, விசேடவிதமாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் அனைத்து பங்குகளையும் எல்லா அலகுகளையும் ஒன்றிணைத்து ஒரு குழுவாக அமைத்தலாகும்.

### இறுதியாக

ஆகவே, எனது ஒருமித்த எதிர்பார்ப்பானது கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் பயனுள்ளதும் நீண்ட காலமாக நடைபெறும் அன்பிய முறையொன்றை உருவாக்கிட இந்த விசேட அன்பிய ஆண்டை அனைவரும் பயன்படுத்துவதுபோன்று, எமது அனைத்து குருக்களும் அதற்கான உளப்பூர்வமாக ஒத்துழைப்பு வழங்கி எமது நோக்கத்தை அடைந்துக்கொள்வதனூடாக எமது பங்குகளின் ஒன்றிணைந்த வாழ்வின் ஒன்றிப்பாக மாறி அதன் வழியாக இறைவனில் ஆழமான நம்பிக்கை மற்றும் அன்பிற்காக வலிமைமிக்க சான்றாகின்ற மக்களாகும் வழியாக கொழும்பு உயர் மறைமாவட்ட கிறிஸ்தவ திருச்சபையானது இறைவன் மனிதன் மீது காட்டும் அளவற்ற அன்பின் உயிருள்ள மற்றும் தெளிவான உருவமாக மாற்றம்பெறச் செய்வதாகும்.

எமது மக்கள் இறை வரப்பிரசாதத்தால் மற்றும் எமது அர்ப்பணிப்புள்ள தியாகத்தின் வழியாக நாம் அனைவரும் ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலைத் தலைவர்கள் மறைத்தூதுப்பணியின் விசேட வரப்பிரசாதமிக்க பயனாளிகளாகவும் நற்செய்தியை பறைசாற்றுபவர்களாகவும் 6ம் பவுல் திருத்தந்தை கூறியவாறு மாற்றம் பெறுவதாகும்.

இதற்கு தேவையான இறை ஆசீர்வாதமும் மரியன்னையின் பரிந்துரையும் கிடைப்பதாக.

**பேராயர். அதிமேதகு, மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**




## மணமகன் தேவை

கொழும்பில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த, கம்பனி ஒன்றில் Executive ஆக வேலை செய்யும், உயரம் 5' 4", 37 வயதுடைய தமிழ், கொழும்பு மணமகளுக்கு, படித்த ஆங்கிலம் பேசக்கூடிய மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு : தொ.பே. 0715273210

Email : wije4219@gmail.com

(AD 2643)



## மணமகள் தேவை

கொழும்பில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த, வங்கியில் Assistant Manager ஆக பணிபுரியும், உயரம் 5' 5", 38 வயதுடைய தமிழ், கொழும்பு மணமகனுக்கு, படித்த ஆங்கிலம் பேசக்கூடிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : தொ.பே. 0719331055

Email : mproporc@gmail.com

(AD 2644)


## 14 இறையருளில்...

முதலாவதாக பிலாத்துவிற்கு முன் உண்மையின் உருவமாகவே நின்று உண்மை பற்றி அந்த உரோமையனைத் தடுமாற வைத்த அதே நற்கருணைக்கு முன்னால் ஆலயத்திற்குள் அமர்ந்திருந்து, "எல்லாம் என் நினைவில் இருக்கிறது ஆண்டவரே, ஆனால் எனது பாவங்கள் மட்டும் எனது நினைவில் இல்லை ஆண்டவரே, எனக்கு நினைவுபடுத்தும் ஆண்டவரே" என்று கூறி அழுது மன்றாடவேண்டும். இரண்டாவதாக உமது எல்லையற்ற அன்பிற்கெதிரான துரோகியாகிவிட்டேன், ஆண்டவரே என்னை மன்னியும் என்று அழுது மன்னிப்புக் கேட்க வேண்டும். மூன்றாவதாக இனிமேல் பாவங்கள் செய்யமாட்டேன் ஆண்டவரே என்று உறுதிப்பாடு செய்யவேண்டும். நான்காவதாக இரக்கத்தின் அரியணையாகிய பாவஅறிக்கைத் தொட்டிக்குச் சென்று இயேசுவாக இருக்கும் குருவிடம் பாவங்களை "வகை தொகை"யோடு ஊதாரி மைந்தன் போன்று நாவினால் அறிக்கையிட வேண்டும். அதாவது யார்யாருக்கு எதிராக, எத்தனை எத்தனை தடவைகள், என்னென்ன பாவங்களை, எப்போது எப்போது செய்தேன் என்று பகுப்பாய்வு செய்து அறிக்கையிடவேண்டும். (பெயர்கள் சொல்லாமல்) நாள், இடம், நேரம், காலம் போன்றவற்றுடன் ஆய்ந்து தெளிந்து அழுது கண்ணிர் விட்டு, துரோகத்தனத்தை உணர்ந்து அறிக்கையிடுவதே நல்ல பாவஅறிக்கை. அவ்வாறாயின் உலகில் ஏறக்குறைய 90% கத்தோலிக்கர் இவ்வாறு பாவங்களை அறிக்கையிடுவதில்லை என்பதே உண்மை. குரு தந்த பாவப்பரிகாரம் மட்டுமல்ல சக்கேயு போன்று பரிகாரம் செய்தாதலேயே ஏற்கெனவே மன்னிக்கப்படும் பாவத்தைத் திரும்பவும் செய்யாமல் இருக்கத் துணிவு கிடைக்கும்.

### முடிவுரை

எனவே இத்தவக்காலம் இறையருளில் நீந்தவும் பாவ மன்னிப்புப் பெறவும் தற்காலிகமாக அல்ல நிரந்தரமாக மனமாற்றம் பெறவும் நற்கருணைப் பிரசன்னத்தில் மாபெரும் தியாகத்தை உணர்ந்து நல்ல பாவ அறிக்கை செய்யவும் தரப்பட்ட அருமையான காலம். மிகுதியான வாழ்வு முழுவதையும் புதிய வாழ்வாக வாழத் "தொடங்கும்" ஒரு உள்ளார்ந்த ஆய்வின் காலம் என்பதை உணர்வோம், வாழ்வோம்.

## 10 விவிலிய வினா விடை

01. சிரியா நாட்டு அந்தியோக்கியா (முன்னுரை)
02. மருத்துவம் (முன்னுரை)
03. திருத்தூதர் பவுல் (முன்னுரை)
04. லூக்கா (முன்னுரை)
05 மாண்புமிகு தியோபிலுக்கு (முன்னுரை)
06. கிரேக்கம் (முன்னுரை)
07. திருச்சபையின் போதனையையும், பணியையும் பற்றி அறிவித்தல் (முன்னுரை)
08. எபிரேயச் சொல்லாட்சி (முன்னுரை)
09. தீத்துவல் (முன்னுரை)
10. கி.பி. 70க்கு பிறகு (முன்னுரை)

**உங்களுடைய பங்கு நிகழ்வுகள், திருவிழாக்கள் போன்றவை எமது பத்திரிகையில் இடம்பெற விரும்பினால் எமது மின்னஞ்சல் வழியாக எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

* இவ்வறிவித்தலானது க.பொ.த சா/த, க.பொ.த உ/த முடித்த பிள்ளைகளின் பெற்றோர்களுக்கானது.
* கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

1. செவிமடுத்தல்
2. கதைத்தல்
3. வாசித்தல்
4. இலக்கணம்
5. சொல்லகராதி
6. வாக்கிய அமைப்பு
7. மரபுத்தொடர்
8. நேர்த்தியான ஆங்கிலம்
9. சொல்லிலக்கணம்
10. வார்த்தை விளையாட்டு
11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு
12. ஆங்கில பாடல்கள்
13. ஆளுமை வளர்ச்சி
14. உணவுக் கருவிகளின் பாவனை முறை

Overcome difficult barrier; fear and shyness. Listening using multimedia. Speak in public with Fluency, competence & pronunciation, Read publicly. Grammar & Sentence Patterns. Vocabulary by maintain a 'Word Bank'. Idioms to speak and write Elegant English. Etymology. Enjoy English using Pun on Words, English/French/Spanish Songs. Etiquette. Use Crockery and Cutlery (Fork and spoons) and calligraphy. (artistic hand writing)

After A/L students to face (job) Interview successfully. We maintain a very high standard of discipline. Lasallian English Academy is situated on a cliff, overlooking Indian Ocean in a picturesque setting, conducive to study. Unbelievable!

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் கார்த்திகை மாதம் 21ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

2021 பங்குனி மாதம் 15ந் திகதி தொடக்கம் ஆனி மாதம் 15ந் திகதி 2021 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறும்.


தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்

* பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2021, பங்குனி மாதம் 15ந் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு. 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

(AD 2556)

அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071-2188551






அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகங்கள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com



## கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.












| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |

தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927

பெக்ஸ் – 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com



அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்